௨

|| ஸ்ரீ க்ருஷ்ணாய பரமாத்மனே நம: ||

# ஸ்ரீமத் பாகவதம்

(தமிழ் வசனம்)

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE
MADRAS-4.

—: பதினோராவது ஸ்கந்தம் :—

மொழிபெயர்ப்பாளர் :

இஞ்சிக்கொல்லை

பண்டிட், ஆர். சிவராம சாஸ்திரிகள்

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ்

ஸ்ரீ வேதவிநாயகர் தெரு : : கும்பகோணம்

பதிப்புரிமை ] 1950 [ விலை ரூ. 2—8—0

# பொருளடக்கம்


| அத்தியாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | யது குலத்தைப் பிராம்மணர்கள் சபித்தது | .. | 1 |
| 2. | வசுதேவருக்கு நாரதர் பாகவத தர்மத்தை உபதேசித்தது | .. | 5 |
| 3. | மாயையும் பூஜாவிதியும் | .. | 15 |
| 4. | நாராயண மகரிஷியின் மகிமை | .. | 29 |
| 5. | பகவானிடத்தில் பக்தி செய்யாதவர்களின் கதி | .. | 35 |
| 6. | தேவர்கள் கிருஷ்ணனை வைகுண்டத்திற்கு அழைத்தது | .. | 45 |
| 7. | பகவான் உத்தவருக்கு உபதேசித்தது | .. | 53 |
| 8. | மலைப் பாம்பு முதலியவைகளிடம் கற்றுக் கொண்டது | .. | 65 |
| 9. | குரரம் முதலியவைகளிடத்தில் அப்பியசித்த குணங்கள் | .. | 74 |
| 10. | தத்துவ ஞான சாதனங்கள் | .. | 80 |
| 11. | பக்த முக்த லட்சணங்கள் | .. | 87 |
| 12. | சாது சங்கத்தின் மகிமை | .. | 98 |
| 13. | ஹம்ஸோபாக்கியானம் | .. | 104 |
| 14. | பக்தியும் தியான யோகமும் | .. | 114 |
| 15. | மோட்சத்திற்கு இடையூறுகளான சித்திகள் | .. | 122 |
| 16. | பகவானுடைய விபூதிகள் | .. | 128 |
| 17. | பிரம்மசாரி, கிருஹஸ்தர்கள் இவர்களது தர்மங்கள் | | 134 |
| 18. | வானப்ரஸ்தர்களுடைய தர்மம் | .. | 143 |
| 19. | ஞானியின் சுருபம் | .. | 151 |

| அத்தியாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 20. | பக்தியோகம் முதலியவை | .. | 158 |
| 21. | குண தோஷங்கள் | .. | 166 |
| 22. | தத்துவங்களின் ஸங்கியை | .. | 177 |
| 23. | பிக்ஷு கீதை | .. | 189 |
| 24. | ஸாங்கிய யோகம் | .. | 200 |
| 25. | ஸத்வம் முதலிய குணங்களின் விருத்திகள் | .. | 205 |
| 26. | யோக நிஷ்டை | .. | 212 |
| 27. | கிரியா யோகம் | .. | 217 |
| 28. | ஞானயோகத்தின் சுருக்கம் | .. | 226 |
| 29. | பக்தியோகத்தின் சுருக்கம் | .. | 237 |
| 30. | ஸ்ரீ கிருஷ்ணன் யது வம்சத்தைச் சங்கரித்தது | .. | 245 |
| 31. | பகவான் வைகுண்டம் சென்றது | .. | 252 |

# ஸ்ரீமத் பாகவதம்

## ஸ்கந்தம் 11

### அத்தியாயம் 1

### யது குலத்தைப் பிராமணர்கள் சபித்தது

*1—7.* ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடன் அசுரர்களைக் கொன்று யாதவர்களுடன் வசித்து மிக்க சண்டை யுண்டு பண்ணிப் பூமியின் சுமையை நிவர்த்தித்தார். மேலும், துரியோதனன் முதலியவர்கள் கபடமாகச் சொக்கட்டான் விளையாடுவது, பரிகசிப்பது, திரௌபதியின் தலைமயிரைப் பிடித்து இழுப்பது முதலிய அநேக கெட்ட காரியங்களைச் செய்ததால் தர்மபுத்திரர் முதலிய பாண்டு குமாரர்கள் மிக்க கோபங்கொண்டார்கள். அந்தப் பாண்டவர்களை நிமித்தமாக வைத்துக்கொண்டு சர்வேசுவரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் இரண்டு கட்சியிலும் சேர்ந்திருந்த அரசர்களைக் கொன்று பூமியின் சுமையை நிவர்த்தித்தார். [பூதனை முதலிய சிலரைத் தாமே கொன்றார். பிரலம்பன் முதலிய சிலரைப் பலராமனைக்கொண்டு கொன்றார். பந்துக்களாக இருந்த அசுரர்களை ஒவ்வொரு நிமித்தத்தை உண்டுபண்ணி யாதவர்களைக்கொண்டு கொன்றார்.] பூமிக்குச் சுமையாயிருக்கும் மற்ற அரசர்களுடைய சைனியத்தைத் தம்மால் சமரட்சிக்கப்பெற்ற யாதவர்களைக்கொண்டு கொன்றார். பின்னும், அளவிடக்கூடாத மகிமையுள்ள ஸ்ரீ கிருஷ்ணன், " பூமிக்குச் சுமையாயிருந்தவர்களைக் கொன்றும் பூமியின் பாரம் நிவர்த்தி அடையவில்லை என்றே நினைக்கிறேன். யதுகுலம் சகிக்க முடியாததாக இருக்கிறது. இந்த யாதவர்கள் என்னை ஆசிரயித்து

இருப்பதாலும், யானை, குதிரை, ரதம், காலாட்கள் முதலிய சைனியங்கள் அதிகமாக இருப்பதாலும் இதனைக் கொல்வதற்குப் பிறரால் முடியாது (நாம் நேரில் கொல்வதும் சரியல்ல). ஆனதால் இவர்களில் ஒருவருக்கொருவர் விரோதத்தை உண்டுபண்ணுகிறேன் அதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு மரணம் அடைவார்கள்! மூங்கில் ஒன்றோடொன்று உராய்ந்து அதனாலுண்டான அக்கினியால் எரிக்கப்படுவது போல யதுகுலம் நாசமடையும். அதன் பின் நாம் வைகுண்டஞ் செல்வோம்" என்று தமக்குள் யோசித்து, சத்தியசங்கற்பராகிய ஈசுவரன் பிராமண சாபமென்ற நிமித்தத்தால் தம்முடைய வம்சத்தைக் கொன்றார். பின்பு, அந்தப் பகவான் மிக்க அழகு பொருந்திய தமது திவ்வியமான சரீரத்தால் ஜனங்களுடைய கண்களைத் திருப்திசெய்தும், தம்முடைய இனிமையான வார்த்தைகளால வாக்குகளையும், தம்மை எண்ணுபவர்களுடைய சித்தத்தையும் கவர்ந்தார். அவருடைய காலடியைத் தரித்தவர்கள் அதன் அழகைப் பார்த்து அவ்விடத்திலிருந்து அசையாமல் நிற்கிறார்கள். பூமியாகிய கிருஷ்ணை காலத்திலிருந்த ஜனங்களை அனுக்கிரகித்தார். பின்னேய ஜனங்களிடத்தில் கருணையால் பகவான் தம்முடைய கீர்த்தியைக் கேட்டு நல்ல கதியை அடையட்டுமென்ற எண்ணத்துடன் பூமியில் கீர்த்தியை ஸ்தாபித்து, தம்முடைய பதத்தை அடைந்தார்" என்று சுகர் சொன்னார்.

8 - 9. அதனைக் கேட்ட அரசன் சுகனை நோக்கி, "ஓ பிராமண! யாதவர்கள் பிராமண பக்தியுள்ளவர்கள் அல்லவா? கொடையாளிகள் எப்பொழுதும் பெரியோர்களுடைய சேர்க்கையுள்ளவர்கள்; கிருஷ்ணனையே தியானித்துக்கொண்டு இருப்பவர்கள். அப்படிப்பட்ட யாதவர்களுக்கு பிராமண சாபம் எப்படி நேர்ந்தது? எதற்

காகப் பிராமணர்கள் சபித்தார்கள்? எப்படிச் சபித்தார்கள்? ஒரே மனமுள்ளவர்களான யாதவர்களுக்கு எப்படி விரோதம் உண்டாயிற்று? அதெல்லாவற்றையும் சொல்லும்" என்று கேட்டார்.

10—14 அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி, "ஸ்ரீ கிருஷ்ணன் மிக்க அழகு பொருந்திய சரீரமுள்ளவரானாலும் விஷயங்களிலேயே ஆசைகொண்டு காமியாக இராமல் மங்களமான கர்மங்களைச் செய்துகொண்டு தாம் சகல காமங்களையும் அடைந்தவரானதால் கர்மங்களின் பயனை விரும்பாமலும், துவாரகா நகரத்தில் கிருகஸ்தராக இருந்து, தர்ம கர்மங்களை அனுஷ்டித்துக் காண்பித்துப் பிறரையும் அனுஷ்டிக்கச்செய்தும், தம்முடைய கீர்த்தியைப் பரவச்செய்துகொண்டும், தம்முடைய வம்சத்தைச் சங்கரிக்கவேண்டுமென்று நினைத்தார். பூபாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதரித்தவரானதால் அந்தக் காரியம் பாக்கியாக இருப்பதால் அப்படி நினைத்தார். இப்படி பகவான் வசித்தவருடைய கிருகத்தில் வசித்து மிக்க புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியவைகளும், மிக்க சுககரங்களும், அவைகளைக் கானஞ் செய்பவர்களுக்குக் கலியின் தோஷத்தைப் போக்கடிப்பவைகளுமான சரிதங்களைச் செய்து தமது வம்சத்தைச் சங்கரிக்க விரும்பி, விசுவாமித்திரர், அசிதர், கண்வர், துர்வாசர், பிருகு, அங்கிரஸ், காசயபர், வாமதேவர், அத்ரி, வசிஷ்டர், நாரதர் முதலிய மகரிஷிகளை வரவழைத்து (சில காரியத்திற்காக வரவழைத்து அந்தக் கர்மங்கள் செய்தபின்) துவாரகைக்குச் சமீபத்திலிருக்கும் பிண்டாரகம் என்ற தீர்த்தத்திற்குப் போகும்படி அவர்களை அனுப்பினார். அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஆக்ஞையின்படி பிண்டாரகம் என்ற தீர்த்தஞ் சென்றார்கள். அப்பொழுது அவ்விடத்தில் யது குமாரர்கள் விளையாடிக்கொண்டிருந்

தார்கள். அந்தக் குமாரர்கள் சாம்பனுக்குப் பெண் வேஷம் போட்டு, அவனை முன்னிட்டு மகரிஷிகளை நோக்கி, "வீணாகாத பார்வையுள்ளவர்களே! இவள் கர்ப்பிணியாக இருக்கிறாள். இவளுக்குப் பிரசவகாலம் சமீபத்தில் இருக்கிறது. இவள் உங்களைக் கேட்பதற்கு வெட்கப்படுகிறாள்; ஆனதால் நாங்கள் கேட்கிறோம். இவள் ஆண் குழந்தையினிடம் பிரியமுள்ளவளாக இருக்கிறாள். இவளிடத்தில் பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? சொல்லுங்கள்" என்று மிக்க வணக்கமுள்ளவர்கள் போல் கேட்டார்கள்.

15-23. அதனைக் கேட்ட மகரிஷிகள் கோபங்கொண்டு "ஓ மூடர்களே! உங்களுடைய குலத்தைக் கொல்லக் கூடிய உலக்கை பிறக்கும்" என்று சொன்னார்கள். அதனைக் கேட்டு அந்தக் குமாரர்கள் மிகவும் பயந்து, சாம்பனுடைய வயிற்றைப் பார்க்க அதில் இரும்புமயமான ஒரு உலக்கை இருந்தது. அதனைக் கண்ட அந்தக் குமாரர்கள் அதிருஷ்டமில்லாதவர்களான நாம் என்ன காரியம் செய்தோம? ஜனங்கள் நம்மை என்ன சொல்வார்கள்? என்று கவலைப்பட்டு அந்த உலக்கையை எடுத்துக்கொண்டு தங்கள் வீடு சென்றார்கள். மேலும் அவர்கள், அந்த உலக்கையைச் சபையில் உக்ரசேனர் முன்பாக வைத்து நடந்த சமாசாரத்தைத் தெரிவித்தார்கள். அதனைக் கேட்ட துவாரகாவாசிகள் பிராமண சாபம் வீணாகாது. அவர்கள் சொல்லியபடி உலக்கையும் இருக்கிறது. இதென்ன ஆச்சரியம்" என்று பயந்தார்கள். யாதவர்களுக்கு அரசராகிய உக்ரசேனர் அந்த உலக்கையைப் பொடியாக்கி அப்பொடிகளைச் சமுத்திரத்தில் எறியச்செய்து பாக்கியான இரும்பையும் சமுத்திரத்தில் போட்டார். அந்த இரும்புத்துண்டை ஒரு மீன் விழுங்கிற்று. இரும்புப் பொடிகள் அலையடித்து சமுத்

திரக் கரையில் ஒதுங்கிக் கோரைகளாக முளைத்தன. பின்பு மீன் பிடிப்பவர்கள் சமுத்திரத்தில் வலை வீசி மீன் பிடித்தார்கள். அப்பொழுது இரும்புத்துண்டை விழுங்கிய மீன் மற்ற மீன்களுடன் வலையில் சிக்கிக்கொண்டது. அதைப் பிடித்துப் பிளந்து அதன் வயிற்றிலிருந்த இரும்புத் துண்டை ஒரு வேடன் அம்பின் நுனியில் வைத்துக்கொண்டான். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இந்த விஷயங்கள் யாவும் தெரியும். ஆனாலும் அவர் காலசுரூபியாக இருந்து யதுவம்சத்தைச் சங்கரிக்க விரும்பியவரானதால் இவைகளை வேறாக மாற்ற சாமர்த்தியமுள்ளவரானாலும் பிராமண சாபத்தை மாற்ற இஷ்டமில்லாமல் அதனை ஒப்புக்கொண்டிருந்தார்.

---

# அத்தியாயம் 2

## வசுதேவருக்கு நாரதர் பாகவத தர்மத்தை உபதேசித்தது

*1-9.* ஓ பரீட்சித்து மகாராஜ ! ஸ்ரீ கோவிந்தருடைய கைகளால் காப்பாற்றப்பட்ட துவாரகா நகரத்தில் நாரதர் ஸ்ரீ கிருஷ்ணனை உபாசிக்க விரும்பி எப்பொழுதும் வசித்துவந்தார். ஓ அரசனே ! மனிதன் எங்கும் மிருத்யு பயமுள்ளவனானதால் இந்திரியமுள்ள எவன் தான் சிறந்த தேவர்களாலும் உபாசிக்கக்கூடிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தை உபாசிக்கமாட்டான். அவர் ஒரு நாள் வசுதேவருடைய கிருகத்திற்குச் சென்றார். வசுதேவர் தேவரிஷியாகிய நாரதரைப் பூஜித்து ஆசனத்தில் உட்காரச் செய்து நமஸ்கரித்து, "ஓ பகவன் ! தாய் தந்தைகளுடைய வரவு எப்படி குழந்தைகளுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறதோ, உத்தம சுலோகராகிய பகவானிடத்தில் பக்தியுள்ள பெரியார்களுடைய வரவு எப்படி

சம்சாரிகளுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதோ, அப்படி பகவத் சுரூபியான உம்முடைய வரவு சகல பிராணிகளுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. தேவர்களுடைய நடை பிராணிகளுக்குத் துக்கத்தையும் (ஆதிகமழை பெய்வதால்)சுகத்தையும் கொடுக்கிறது. ஸ்ரீமந்நாராணனையே மனதால் நினைத்திருப்பவர்களான உம்மைப் போன்ற சாதுக்களுடைய நடை, பிராணிகளுக்கு சுகத்தையே உண்டுபண்ணுகிறது. எந்த மனிதர்கள் கர்மங்களைச் செய்து எப்படி தேவர்களை உபாசிக்கிறார்களோ, அதற்குத் தக்கபடி தேவர்களும் கர்மத்தின்படி மனிதர்களுக்கு நிழல் போல உபகரிக்கிறார்கள். சாதுக்கள் அப்படி அல்ல; தீனர்களிடத்தில் மிக்க அன்புள்ளவர்கள். (தம்மை ஆசிரயிக்காவிடினும் பிரீதிசெய்கிறார்கள் என்று கருத்து.) ஓ பிராம்மண! உம்முடைய வரவாலேயே கிருதார்த்தனாக இருக்கிறேன். ஆனாலும் நீர் எதனை அனுஷ்டித்து ஈசுவரனுடைய அனுக்கிரகத்தை அடைந்தீர்? அந்தப் பாகவத தர்மத்தைச் சொல்லும். அதனைச் சிரத்தையுடன் கேட்டமாத்திரத்தில் பயத்திலிருந்து நிவர்த்தி அடைவான். நான் முன் ஜன்மத்தில் அனந்தராகிய பகவானைப் புத்திரன் பிறக்கவேண்டிப் பூஜித்தேன். முக்தியைக் கொடுப்பவரானாலும் அவருடைய மாயையால் மோகித்து மோட்சத்திற்காகப் பூஜிக்கவில்லை. ஆனதால் பலவகையானவை விசனமுள்ளதும், எங்கும் பயமுள்ளதுமான சம்ஸாரத்திலிருந்து சீக்கிரத்தில் நிவர்த்தி அடைவேனோ அப்படி எனக்கு உபதேசிக்க வேண்டும். நீர் நல்ல விரதங்களை அனுஷ்டித்தவர்" என்று கேட்டுக்கொண்டார்.

10—14. ஓ அரசனே! புத்திசாலியாகிய வசுதேவருடைய வார்த்தையைக் கேட்டு, தேவரிஷியாகிய நாரதர் ஸ்ரீ நாராயணனுடைய குணங்களை நினைத்து, மிக்க பிரீதி

யுடன், "ஓ சாத்வதர்களுக்குட் சிறந்தவரே! நல்ல காரியத்தில் முயற்சித்தீர். ஜகத்தைப் பரிசுத்தப்படுத்தும் பாகவத தர்மங்களைப்பற்றிக் கேட்டீரல்லவா? இந்தப் பாகவத தர்மத்தைக் கேட்டாலும், படித்தாலும், தியானஞ் செய்தாலும், அதில் பிரியம் வைத்தாலும், அதனை அனுமோதித்தாலும் தேவர்களுக்கும் ஜகத்திற்கும் துரோகம் செய்பவர்களானாலும் சுத்தர்களாவார்கள். மிக்க கல்யாண சுபாவமுள்ளவரும், தம்முடைய திவ்விய நாமங்களைக் கேட்பவர்களுக்கும், உச்சரிப்பவர்களுக்கும் புண்ணியத்தைக் கொடுப்பவருமான ஸ்ரீமந் நாராயணனைத் தியானிக்கும்படி செய்தீர். இந்த விஷயத்தில் ரிஷபருடைய புத்திரர்களுக்கும் நிமிக்கும் நேர்ந்த சம்வாதமாகிய பல நாளைக்கு முன் நடந்த இதிகாசத்தை உதாரணமாகச் சொல்லுகிறேன்.

15—31. சுவாயம்புவ மனுவின் புத்திரனாகிய பிரியவிரதருக்கு ஆக்னீத்ரரென்பவர் புத்திரர். அவருடைய புத்திரர் நாபியென்பவர். அவருடைய புத்திரர் ரிஷபர் என்பவர். மோட்ச தர்மத்தை உலகத்திற்கு உபதேசிப்பதற்காகப் பகவானுடைய அம்சமே ரிஷபராக அவதரித்தது என்று சொல்லுகிறார்கள். அவருக்கு நூறு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் பிரம்மத்தை அறிந்தவர்கள். அவர்களில் பரதர் என்ற மூத்தவர் ஸ்ரீ நாராயணனிடத்தில் மிக்க பக்தியுள்ளவர்; அவருடைய பெயரால்தான் இந்த வருஷம் பாரதவர்ஷமென்று பெயர் அடைந்தது. (முன் அஜநாபமென்ற பெயருள்ள வர்ஷம் பாரதமென்ற பெயரடைந்தது.) அவர் இந்தப் பூமியைப் பரிபாலித்து, சகல போகங்களையும் அனுபவித்து, பின்பு காட்டிற்குச் சென்று தவஞ் செய்து ஸ்ரீ ஹரியை மூன்று ஜன்மங்களில் உபாசித்து அவருடைய பதத்தை அடைந்தார். பாக்கியான புத்திரர்களில் ஒன்பது குமாரர்கள்

ஒன்பது தீவுகளுக்கு அதிபதிகளாக இருந்தார்கள். எண்பத்தொரு குமாரர்கள் கர்ம மார்க்கத்தைப் பூமியில் பரவச்செய்துகொண்டிருந்தார்கள். கவி, ஹரி, அந்தரிட்சர், பிரபுத்தர், பிப்பலாயனர், ஆவிர்கோத்திரர், திரமீளர், சமஸர், கரபாஜனர் என்ற ஒன்பது குமாரர்கள் ஆத்ம தத்துவத்தை அப்பியசிப்பதில் சிரமப்பட்டவர்களும், தத்துவத்தை நிரூபிப்பவர்களும், திகம்பரர்களும், ஆத்மவித்தையில் சமர்த்தர்களுமாக இருந்தார்கள். அவர்கள் இந்த ஜகத்தைப் பகவந் சுரூபமாகவும் ஸ்தூல சூட்சும ரூபமாகிய அதனைத் தாமாகவும் பார்த்துக்கொண்டு பூமியில் சஞ்சரித்தார்கள். அவர்கள் ஒன்றிலும் பற்றுதல் இல்லாமல் மகரிஷிகள், சாரணர்கள், பூதநாதர், வித்தியாதரர்கள், பிராமணர்கள், பசு, தேவர்கள், சாத்தியர்கள், சித்தர்கள், கந்தர்வர்கள், யட்சர்கள், கின்னரர்கள், நாகர்கள் ஆகிய இவர்களுடைய உலகங்களில் தங்களிஷ்டப்படி சஞ்சரித்தார்கள். ஒருகால் பாரத வர்ஷத்தில் நிமி யாகஞ் செய்துகொண்டிருக்க, அந்த யாகசாலைக்கு அந்த யோகிகள் வந்தார்கள். சூரியன் போன்ற அந்தப் பாகவதர்களான யோகிகளைக் கண்டு யஜமானன், ஆகவனீயம் முதலிய அக்கினிகள், பிராமணர்கள் ஆகிய எல்லோரும் எழுந்திருந்தார்கள். நிமி அவர்களைப் பிரம்மவித்துக்களென்று தெரிந்துகொண்டு, மிக்க பிரியத்துடன் ஆசனங்கொடுத்து விதிப்படி' பூசித்தார். மேலும் அவர், சனகர் முதலிய பிரம்ம தேவருடைய புத்திரர்கள் போல் பிரகாசிக்கும் அந்த யோகிகளை நோக்கி மிகுந்த வணக்கத்துடன், "விஷ்ணு பக்தர்கள் உலகங்களைப் பரிசுத்தப் படுத்துவதற்காக உலகங்களில் சஞ்சரிப்பார்கள். ஆனதால் உங்களை ஸ்ரீ மகா விஷ்ணுவின் பார்ஷதர்களென்று நினைக்கிறேன். ஒரு க்ஷணத்தில் நாசமடையக்கூடியதானாலும் மனித ஜன்மம் கிடைப்பது அரிது. [புருஷார்த்

துங்களை அடைவதற்குச் சாதனமாக இருக்கிறது.] அந்த ஜன்மத்திலும் விஷ்ணு பக்தர்களாகிய சாதுக்களுடைய தரிசனம் கிடைப்பது அரிது. ஓ பாபமற்றவர்களே! எதனைச் செய்தால் முக்கியமான க்ஷேமத்தை (மோட்சத்தை) அடையலாம்; அதனைச் சொல்லவேண்டும். இந்த சம்ஸாரத்தில் அரை க்ஷணமாகிலும் சாதுக்களுடைய சேர்க்கை நேர்ந்தால் அது மிக்க ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது. எந்தத் தர்மங்களை அனுஷ்டித்தால் பகவான் சந்தோஷித்து, பக்தனுக்குத் தம்மையும் கொடுப்பாரோ, அப்படிப்பட்ட பாகவத தர்மங்களை நான் கேட்கக்கூடுமானால் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

32—43. ஓ வசுதேவ! இப்படி நிமியால் கேட்கப்பட்ட அந்த யோகிகள் அவரைச் சிலாகித்து, சதஸ்யர்களும், ரித்விக்குகளும் கேட்டிருக்கப் பதில் சொன்னார்கள். அவர்களில் கவி என்பவர் அரசனை நோக்கி, "தேகம் முதலியவைகளை ஆத்மாவென்று நினைத்து, எப்பொழுதும் பயத்தை அடைந்திருக்கும் புருஷன் இந்த உலகம் முழுவதும் ஈசுவரசுரூபமென்று நினைத்தால் பயம் நிவர்த்தியடையும். ஆனதால் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தை உபாசிப்பதே சகல பயத்தையும் நிவர்த்திக்கக்கூடியது என்று நினைக்கிறேன். (பரம க்ஷேமம் இன்னதென்று காட்டப்பட்டது.) அஞ்ஞானிகள் சுகமாக ஆத்மதத்துவத்தைத் தெரிந்துகொள்வதற்காகப் பகவான் தாம் எந்த உபாயங்களைச் சொல்லியிருக்கிறாரோ, அவைகள் பாகவத தர்மங்கள். (பகவான் மனு முதலியவர்களைக்கொண்டு வர்ணாசிரம தர்மங்களை உலகத்திற்குக் காண்பித்து மிகவும் ரகசியமான ஆத்ம தத்துவத்தைத் தாமே சொன்னார் என்று கருத்து.) கண்களை மூடிக்கொண்டும், ஓடிக்கொண்டும் அவைகளை அனுஷ்டித்தாலும் தவறுதலை அடைகிறதில்லை. பிரத்யவாயத்தை

அடைகிறதில்லை: பயனை அடையாமலிருக்கிறதில்லை. (சுருதி, ஸ்மிருதி ஆகிய இரண்டும் இரண்டு கண்கள். ஒன்றில்லாதவன் காணனெனப்படுகிறான். இரண்டுமில்லாதவன் அந்தனென்னப்படுகிறான். யாகம் முதலிய கர்மங்களை அனுஷ்டிப்பவனுக்கு இடையூறு உண்டாகிறதில்லை. ஓடிக்கொண்டென்றால் சீக்கிரமாக அனுஷ்டிப்பது என்றும் மூடிக்கொண்டென்றால் தெரியாமலென்றும் அர்த்தங்கொள்ளவேண்டும்.) (சரீரத்தாலும், வாக்கினாலும், மனத்தாலும், இந்திரியங்களாலும், புத்தியாலும், அகங்காரத்தாலும் அனுசரிக்கப் பெற்று எதனைச் செய்கிறேனோ, அதெல்லாவற்றையும் பரம புருஷனாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு என்று சமர்ப்பிக்கவேண்டும்.) (இது தான் பாகவத தர்மம் என்று கருத்து.) தேகத்தில் அபிமானம் வைப்பதால் பயம் உண்டாகிறது. ஈசுவரனிடத்தில் பக்தி செய்யாதவனுக்குப் பகவானை நினைக்காமல் இருப்பதும், தேகத்தை நானென்று நினைக்கும் விபரீத ஞானமும் உண்டாகிறது. அதுவும் பகவானுடைய மாயையால் உண்டாகிறது. ஆனதால் வித்வானாக இருப்பவன் சர்வேசனாகிய அந்தப் பகவானை மிக்க பக்தியுடன் உபாசிக்கவேண்டும். மேலும், குருவையே தேவதையாக நினைக்கவேண்டும். ("என்னுடைய மாயையானது முக்குண சுரூபமானது, தேவ சம்பந்தம் உள்ளது, தாண்ட முடியாதது. என்னையே எவர்கள் சரணமடைகிறார்களோ அவர்கள் இந்த மாயைத் தாண்டுகிறார்கள்"- **பகவத் கீதா.** அஞ்ஞானத்தால் ஏற்பட்ட பயம் ஞானத்தால் நிவர்த்தி அடையுமே யொழிய, பரமேசுவர பஜனத்தால் என்ன பிரயோஜனம் என்றால் அவரை உபாசித்தால்தான் மாயையைத் தாண்டலாமென்று காண்பிக்கப்பட்டது.) விஷயங்களில் மனம் செல்லுவதால் ஏகாந்தமான பக்தி எப்படி உண்டாகும் என்றால் விஷயமென்பது உண்மை

யானதல்ல. ஆனதால் மனத்தை அடக்குவதால் அபய முண்டாகுமென்று இந்தச் சுலோகத்தால் காட்டப்படு கிறது. சிருஷ்டிக்கு முன் இல்லாமலிருந்த இந்தப் பிர பஞ்சமானது உண்மையில் இல்லாததானலும் இருப்ப தாகத் தோன்றுகிறதல்லவா? "மனத்தால் சங்கற்பிக்கும் பொழுது சொப்பனம், மனோரதம் ஆகிய இவைகள் எப்படி உண்டாகின்றனவோ, அப்படி பிரபஞ்சம் தோன்றுகிறது. (புருஷன் மனத்தால் ஒரு மனோரதத்தை நினைத்து அத னையே தியானஞ்செய்தால் அது உண்மையில் அவனால் அடையப்படாவிடினும் எப்படித் தோன்றுகிறதோ, சொப்பனம் எப்படி சத்தியம்போலத் தோன்றுகிறதோ' அப்படி ஜகத் தோன்றுகிறதென்று தாத்பரியம்.) ஆன தால் கர்மங்களைச் சங்கற்பிப்பதும் விகற்பிப்பதுமான மனத்தை விஷயங்களில் செல்லாமல் அடக்கி, பகவானி டத்தில் செலுத்தவேண்டும். அதனால் அபயம் கிடைக் கும் (பயம் நிவர்த்தியாகும்). இப்படிச் செய்வது மிக்க கடினமானலும் அதற்குச் சுகமான உபாயம் ஒன்று இருக் கிறது அது என்னவெனில், சக்கரபாணியாகிய ஸ்ரீ பகவானுடைய மங்களகரமான அவதாரங்களையும், சரிதங் களையும், அதையே பிரயோசனமாகக்கொண்ட திவ்விய நாமங்களையும் கேட்டுக்கொண்டும், வெட்கமில்லாமல் கானஞ்செய்துகொண்டும், ஆசையையொழித்துச் சஞ்சரிக்கவேண்டும். (இப்படி பகவானை உபாஸித்தால் பிரேமையென்ற பக்தியுண்டாகும்.) இப்படி பகவானுடைய திவ்விய நாமங்களை உச்சரித்தால் அவரிடத்தில் பிரேமை விருத்தியாகும். அதனால் இருதயம் உருகுகிறது. பின்பு பகவான் பக்திக்கு வசப்பட்டவர் என்பதைத் தெரிந்து கொண்டு உரக்கச் சிரிக்கிறான். இவ்வளவு காலம் என் னைப் பகவான் உபேட்சித்தார் என்று அழுகிறான். மிகுந்த ஆசையால் கத்துகிறான். ஓ ஹரியே! என்னை

அனுக்கிரகியும் என்று சந்தோஷமாக்க் கானஞ் செய்கிருன். மேலும் அவன் ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், பூமி, சூரியன் முதலிய தேஜசுகள், பிராணிகள், திக்குகள், விருட்சங்கள், மலைகள் நதிகள், சமுத்திரங்கள் முதலிய உலகத்திலுள்ள எல்லாவற்றையும் நாராயணனுடைய சரீரமென்று நினைத்து, அதனையே கதியென்று நமஸ்கரிக்கவேண்டும். (இம்மாதிரியான கதி ஆரூடர்களான யோகிகளுக்கும் அனேக ஜன்மங்களாலும் கிடைப்பது அரிது. அப்படியிருக்க, நாமத்தை உச்சரிப்பதால் ஒரு ஜன்மத்தில் எப்படிக் கிடைக்குமென்ருல், அடுத்த சுலோகத்தில் சமாதானம் சொல்லப்படுகிறது.) ஆகாரத்தைப் புசிப்பவனுக்கு ஒவ்வொரு கவளத்திலும் சுகம், வயிறு நிரம்புவது, பசி அடங்குவது முதலியவை முறையே ஒரே காலத்தில் உண்டாவதுபோல ஸ்ரீ ஹரியைச் சேவிப்பவனுக்கு பக்தி (பிரேமை), பகவானுடைய சுரூபம் தோன்றுவது, அதனல் சுகத்தை அடைந்து மற்ற விஷயங்களில் வைராக்கியம் ஆகிய மூன்றும் ஒரே காலத்தில் உண்டாகின்றன. இப்படி பிரேமை முதலிய மூன்றும் உண்டான பின்பும் தொடர்ச்சியாகப் பகவானைச் சேவித்தால் பக்தி, வைராக்கியம், பகவானுடைய சுரூப அனுபவம் ஆகிய மூன்றும் ஸ்திரமாகின்றன. அதன் பின்பு பாகவதனுகிய அந்தப் புருஷன் சாந்தியை அடைவான்" என்று சொன்னுர்.

44—55. அதனைக் கேட்ட நிமி, "பகவான் சாந்தியை அடைவானென்று சொல்லப்பட்டதே பாகவதன் என்ருல் அவன் எதனைச் செய்துகொண்டிருப்பான்? அவன் சுபாவம் எப்படியிருக்கும்? எப்படிச் சஞ்சரிப்பான்? எதனைச் சொல்வான்? எந்த அடையாளமுள்ளவனுக இருப்பான்? அதனைச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அதனைக் கேட்ட ஹரி என்பவர் அரசனை நோக்கி,

"எவன் சகல பிராணிகளிடத்திலும் வசிக்கும் பகவானுடைய ஒப்புயர்வற்ற ஐசுவரியத்தைப் பார்க்கிறேனே, (உயர்வு தாழ்வாகப் பார்க்கவில்லை என்று கருத்து) குறைவற்ற ஐசுவரியம் முதலியவைகளுள்ள பகவானிடத்தில் சகல பிராணிகளையும் எவன் பார்க்கிறானோ, அவன் பாகவதர்களுக்குள் சிறந்தவன். அல்லது சகல பிராணிகளிடத்திலும் தான் பிரம்ம சுரூபியாக இருப்பதாகவும், பிரம சுரூபமான அதிஷ்டானத்தில் சகல பிராணிகள் இருப்பதாயும் எவன் பார்க்கிறானோ அவன் பாகவதர்களுக்குள் சிறந்தவன். எவன் ஈசுவரனிடத்தில் பிரேமையும், ஈசுவர பக்தர்களிடத்தில் மைத்ரியையும், அஞ்ஞர்களிடத்தில் கிருபையையும், விரோதிப்பவர்களிடத்தில் உபேக்ஷையையும் செய்கிறானோ அவன் மத்தியமன் (நடுத்தரம்). எவன் தேவதா பிரதிமைகளையே சிரத்தையுடன் பூஜிக்கிறானோ, ஈசுவர பக்தர்களைப் பூஜிக்கிறதில்லையோ, மற்றவர்களைக் கவனிக்கிறதில்லையோ அவன் பராகிருத பக்தன். (பக்தி இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது. அளவில் உத்தமனாகி விடுவானென்று தாத்பரியம்). பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தியவன் இந்திரியங்களால் விஷயங்களைக் கிரகிக்கமாட்டான், அப்படிக் கிரகித்தாலும் அதனால் சந்தோஷத்தை அடையான். அவைகளை விரோதிக்கவும் மாட்டான். இந்த ஜகத் விஷ்ணுவின் மாயாமயமென்று நினைத்திருப்பான். அவன் பாகவதர்களுக்குள் சிறந்தவன். எவன் பகவானைத் தியானித்து, சரீரத்தின் ஜனன மரணம், பிராணனுடைய தர்மமான பசி, மனத்தின் தர்மமான பயம், புத்தியின் தர்மமான ஆசை, இந்திரியங்களுடைய தர்மமான சிரமம் ஆகிய ஸம்ஸார தர்மங்களால் மோகிக்காமலிருக்கிறானோ, அவன் பாகவதர்களுக்குள் சிறந்தவன். எவனிடத்தில் காமம், கர்மம், முந்திய வாசனைகள் ஆகிய இவைகள் உண்டாகிறதில்லையோ, எவனுடைய மனம் வாசுதேவரையே ஆசிரயித்திருக்

கிறதோ, அவன் பாகவதர்களுக்குள் சிறந்தவன். (எப்படிச் சஞ்சரிப்பானென்பதற்குப் பதில் சொல்லப்பட்டது) எவன், 'நான் நல்ல குலத்தில் பிறந்தவன், நான் தபஸ்வி, நான் பிராம்மணன், நான் சன்யாஸி, நான் உயர்ந்த ஜாதி' என்று தேகத்தில் அகங்காரமற்றிருக்கிருனே, அவன் நாராயணனுக்குப் பிரியனுகிருன். எவனுக்குத் தான், பிறர் என்ற பேதமும், தன்னுடையது, பிறருடையதென்று பேதபுத்தியுமில்லையோ, எவன் சகல பிராணிகளிடத்திலும் சமபுத்தியுள்ளவனே, எவன் சாந்தனே, அவன் பாகவதர்களுக்குள் சிறந்தவன். பகவானுடைய பாதாரவிந்தமானது பகவானிடத்தில் மனதைச் செலுத்திய பிரமமா முதலியவர்களாலும் தேடப்பட்டிருக்கிறது (அடையப்படவில்லை). அப்படிப்பட்ட பாதாரவிந்தத்தைக் காட்டிலும் ஸாரமான வஸ்து வேறென்றுமில்லையென்று எவன பகவானை உபாஸிக்கிருனே, அவன் மூவுலக ராஜ்யம் கிடைப்பதாயினும் அரைநிமிஷங்கூடப் பகவானுடைய பாதாரவிந்தத்தை மறக்கமாட்டான். அவனே விஷ்ணு பக்தர்களுக்குள் சிறந்தவன். அழகான நடையுள்ள பகவானுடைய பாதங்களிலுள்ள விரல்களுடைய நகமாகிய சந்திரனுல் எவனுடைய ஹிருதயத்திலுள்ள சகல தாபங்களும் நிவர்த்திக்கப்படுகின்றனவோ (எவன் பகவானை இடைவிடாமல் தியானிக்கிருனே) அந்தப் பக்தனுடைய இருதயத்தில் திரும்பவும் சூரியனுடைய தாபம் உண்டாகுமா? ஸ்ரீமகாவிஷ்ணுவின் திவ்யநாமத்தை அலட்சியமாக உச்சரித்தாலும் சகல பாபங்களும் நிவர்த்தியாகின்றன. அப்படியிருக்க, பிரேமையாகிய கயிற்றுல் இருதயமாகிய தாமரை மலரில் பகவானுடைய பாதத்தை எவன் கட்டுகிருனே (தியானிக்கிருனே) அவனுடைய இருதயத்தைவிட்டுப் பகவான் அப்புறம் செல்லுகிறதில்லை (அவ்விடத்திலேயே வசிக்கிருர்). அவனே பாகவதர்களுக்குள் சிறந்தவனென்று சொல்லப்படுகிருன்.

## நோட்டு

கவியென்ற யோகியானவர் 33-ம் சுலோகத்தால் மிகவும் க்ஷேமமான காரியம் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தை உபாஸிப்பது என்றார். 34-ம் சுலோகத்தால் பாகவத தர்மம் இன்னது என்கிறதைச் சொன்னார். 36-ம் சுலோகத்தால் "ஓ அர்ஜுனா! எதனைச் செய்கிறாயோ, எதனைப் புசிக்கிறாயோ, எதனை ஹோமம் செய்கிறாயோ, எதனைக் கொடுக்கிறாயோ, தவம் செய்கிறாயோ அதனை எனக்கு அர்ப்பணம் செய்" என்ற கீதையின் அர்த்தம் காண்பிக்கப்பட்டது. சகல பிராணிகளிடத்திலும்—45, 46, 47-ம் சுலோகங்களால் பாகவதனுடைய தர்மம் சொல்லப்பட்டது.

வீரராகவீயத்தில்—

பிரம்மத்தை யறிந்தவர்கள்—மூலத்தில் பிரம்மபாரகமென்றிருப்பதால் சிலர் வேதத்தை யறிந்தவர்களென்றும், சிலர் பிரம்மத்தை யறிந்தவர்களென்றும், சிலர் இரண்டையும் அறிந்தவர்களென்றும் சொல்லுகிறார்கள். தீவுகளுக்கு—இளாவர்த்தம், பிரம்மாவர்த்தம், ஆரியாவர்த்தம், மலயம், கேது, பத்ரசேன, இந்திரஸ்பிருக், விதர்ப்ப, கீகட என்று ஒன்பது தீவுகள். குருவையே— பகவானுடைய மாயையால் சரீரத்தில் ஆத்மா என்ற புத்தியும், ஜகத்து பிரம்மசுரூபம் இல்லை என்ற புத்தியும் உண்டாகிறது. ஸ்வப்பனம்-ஸ்வப்பனமாவது அநித்தியமானாலும் நித்யம்போல் எப்படித் தோன்றுகிறதோ அதுபோல தேகமானது ஆத்மாவாக இல்லாமலிருந்தாலும் ஆத்மா அஸ்வதந்திரனாக இல்லாமலிருந்தாலும், அப்படியிருப்பதாகத் தோன்றுவதால் அதற்குக் காரணமாகிய மனத்தை அடக்கவேண்டும்.

---

# அத்தியாயம் 3

## மாயையும் பூஜா விதியும்

1—2. நிமியென்ற அரசன் அந்த நவயோகிகளை நோக்கி, "ஓ பகவான்களே! இந்த ஜகத்தை விஷ்ணுவின் மாயாமயமென்று பார்ப்பவன் பாகவதர்களுக்குள் சிறந்த

வன் என்று சொல்லப்பட்டதே. மாயாவிகளையும் மோகிக்கச்செய்வதான விஷ்ணுவின் மாயையைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஸம்ஸார தாபத்தால் மிகவும் தாபத்தை அடைந்த நாம் அந்தத் தாபத்திற்கு ஔஷதமாக இருக்கும் விஷ்ணு கதாமிருதமாகிய உங்களுடைய வார்த்தையைக் கேட்டுத் திருப்தி அடையவில்லை. ஆனதால் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

3—20. அதனைக் கேட்டு அந்தரிக்ஷர் என்பவர் நிமியை நோக்கி, நிர்க்குணமாகிய பிரம்மம சகுணமென்றும், இரண்டாவது உள்ளதென்றும் எதனால் நினைக்கப் படுகிறதோ, ஈசுவரன் இந்த ஜகத்தை எதைக்கொண்டு சிருஷ்டித்தாரோ அது மாயை. (மாயையின் சுரூபத்தை நேரில் சொல்ல முடியாததனால் சிருஷ்டி முதலிய காரியத்தின் வழியாகச் சொல்லப்பட்டது.) இந்திரியங்களால் உண்டுபண்ணப்பட்ட பிரம்மஞானமே ஜாக்ரமெனப்படுகிறது. அந்தக்கரணத்தால் உண்டுபண்ணப்பட்ட பிரம்மமே சொப்பனம் எனப்படுகிறது. அந்த ஜாக்ரம், சொப்பனம் இவைகளுடைய சம்ஸ்காரத்துடன் கூடிய உபாதான காரணமே சுஷுப்தி எனப்படுகிறது. ஆனதால் இந்த மூன்றும சத்தியமானவையல்ல. இந்த மூன்று அவஸ்தைகளிலும் தொடர்ச்சியாக இருந்ததும், இம் மூன்று அவஸ்தைகளைவிட வேறானதுமான வஸ்துவே சத்தியமானது. (தூங்கி விழித்த பின சொப்பனத்தில் கண்டவைகளில்லாமையாதல் சொப்பனம் மித்யை என்று தெரியவருகிறது. ஜாக்ரம், சுப்தம் இந்த இரண்டு அவஸ்தைகளுக்குப் பாதகமில்லாததால் அவைகளை மித்யை என்று எப்படிச் சொல்லலாம் என்றால் அடுத்த சுலோகத்தால் சமாதானம் சொல்லப்படுகிறது.) தெரிந்து கொள்பவன், தெரிந்துகொள்வது, அறியப்படுவது என்ற பேதமானது எப்படிச் சொப்பனத்தில் ஏற்படுகிறதோ,

அப்படி ஜாக்ரத்திலும் சுப்தத்திலும் மேற்காட்டிய மூவகையான பேதம் மாயையால் ஏற்படுகிறது. உண்மையில் சுத்தமாகிய ஞானமொன்றே. வேதத்தால் நிஷேதிக்கப்பட்டிருப்பதாலும், சில சமயம் இல்லாமலிருப்பதாலும் ஜாக்ரம், சுப்தம் இவைகள் பொய்யானவை. மரணமடைந்த புத்திரன் முதலிய பந்துக்களை எப்பொழுதும் நினைப்பதால் அவர்களைச் சொப்பனத்தில் நேரில் பார்க்கிறோமல்லவா? அது மனோரதம் எனப்படுகிறது. அந்த மனோரதத்திலும் சொப்பனத்திலும் காணப்படுகின்ற தெரிந்துகொள்ளுகிறவன், தெரிந்துகொள்வது, அறியப்படுவது ஆகிய மூன்றும் எப்படி மித்யையோ அப்படி ஜாக்ரத்திலும் காணப்படும். அவை மித்யையானவை (பொய்) என்று தெரிந்துகொண்டவன் சம்சயமற்றவனாவான். அவை எதனால் பொய்யென்று சொல்லப்படுகிறது என்றால், உண்மையான சுரூபத்தை அடையாமலிருப்பதாலும், சுப்த ஜாக்ரத் இல்லாமலிருப்பதாலும் அவை எப்படி மித்யையோ, அப்படிப்போல ஜாக்ரதம், சுப்தம் இவைகளும் மித்யாபூதமானவை. சகல பிராணிகளுக்கும் காரணனாக இருக்கும் பரம புருஷன் ஜீவனுக்கு விஷய போகத்திற்காகவும், மோக்ஷத்திற்காகவும் இந்த மகா பூதங்களைக்கொண்டு பலவகையான பிராணிகளை எந்தச் சக்தியால் சிருஷ்டிக்கிறாரோ, அதுவே மாயை. இப்படி பகவான் ஐந்து மகா பூதங்களைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளிடத்தில் அந்தர்யாமியாகப் பிரவேசித்து மனோரூபியாகவும், இந்திரியங்களின் சுரூபியாகவும், ஆத்மாவைப் பிரித்துக்கொண்டு விஷயங்களை அனுபவிக்கச் செய்கிறார். அந்தர்யாமியாகிய பகவானால் பிரகாசிக்கும் இந்திரியங்களைக்கொண்டு அந்த ஜீவன் விஷயங்களை யனுபவித்து இந்தச் சரீரத்தை ஆத்மாவென்று நினைத்து,

சரீரம் முதலியவைகளில் அபிமானம் வைக்கிறான். மேலும் அந்த ஜீவன் கர்மவாசனைகளுடன் கூடிய கர்மங்களைக் கர்மேந்திரியங்களால் செய்து, அந்தக் கர்மத்தின் பயனாகிய சுக துக்கங்களை அனுபவித்து இந்தச் சம்ஸாரத்தில் சுற்றுகிறான். பலவகையான துக்கத்தை வகிப்பவனாகிய புருஷன் இப்படிக் கர்மத்திற்குத் தக்கபடி ஜனன மரணங்களைப் பிரளயகாலம் வரையில் அனுபவிக்கிறான். மகா பூதங்களுக்கு நாசகாலம் நேர்ந்தபொழுது ஸ்தூல சூட்சும சுரூபமாகிய காரியப் பிரபஞ்சத்தை ஆதி அந்தம் அற்றதாகிய காலமானது அவ்யக்தத்தில் சேர்க்கிறது. அதன் பின்பு, நூறு வருஷ காலம் மழை பெய்யாமல் இருக்கும். அந்தக் காலத்தில் மிக்க உஷ்ணமான வெயிலுள்ள சூரியன் மூன்று உலகங்களையும் தகிப்பான். அப்பொழுது சங்கர்ஷணருடைய முகத்திலிருந்து அக்கினி, வாயுவினால் தூண்டப்பட்டு, பாதாளம் முதல் உயரக் கிளம்பி நான்கு புறத்திலும் ஜ்வலிக்கும். அதன் பின் சம்வர்த்தகமென்ற மேக கணங்கள் நூறு வருஷ காலம் யானையின் துதிக்கை போன்ற பிரமாண முள்ளதாக மழை பெய்யும். அப்பொழுது விராட்டானது ஜலத்தில் லயத்தை அடையும். விராட் சரீராபிமானியான வைராஜன் அதனை விட்டு அவ்யக்தத்தை அடைகிறான். அக்கினி எரிப்பதற்குக் கட்டை இல்லாவிடில் அணையவில்லையா? அதன் பின் பூமியின் குணமாகிய கந்தம் பிரளயகால வாயுவினால் அபகரிக்கப்படும். அந்தப் பூமி ஜலத்தில் லயிக்கிறது. அந்த ஜலத்தின் ரசமும் வாயுவினால் அபகரிக்கப்பட்டு ஜலம் தேஜஸில் லயிக்கிறது. அந்தத் தேஜஸின் ரூபமானது பிரளயகாலத்து இருளால் அபகரிக்கப்படும். அப்பொழுது அந்தத் தேஜஸ் வாயுவில் லயிக்கிறது. வாயுவின் குணமான ஸ்பரிசமானது. ஆகாசத்தால் அபகரிக்கப்படும். அந்த வாயு ஆகாசத்தில் லயிக்கிறது. கால சுரூபியான ஈசுவரனால் ஆகாயத்தின் குணமான சப்தம் அப

கரிக்கப்படும். அந்த ஆகாயம் தாமஸ அகங்காரத்தில் லயிக்கிறது. இந்திரியங்களும் புத்தியும் ராஜஸ அகங் காரத்தில் லயிக்கின்றன. மனதும், வைகாரிக தேவர் களும் சாத்விகமான அகங்காரத்தில் லயிக்கிறார்கள். அகங்காரம் தன்னுடைய காரியங்களுடன் மகத் தத்து வத்தில் லயிக்கிறது. (மகத் தத்துவம் பிரகிருதியில் லயிக்கிறது; பிரகிருதி பிரம்மத்தினிடம் லயிக்கிறது.) சிரு ஷ்டி, பரிபாலனம், நாசம் ஆகிய இவைகளுக்குக் காரண மாக இருப்பது பகவானுடைய மாயை. இது முக்குண சுரூபமுள்ளது. இன்னும் எதனைக் கேட்க விரும்புகிறீர்'' என்றார்.

21—37. அதனைக் கேட்ட நிமி என்ற அரசன், 'மனத்தை ஜயிக்காதவர்களால் தாண்டமுடியாத ஈசுவர சம்பந்தமான இந்த மாயையை ஸ்தூல புத்தியுள்ளவர் கள் எப்படித் தாண்டுவார்கள்? ஓ மகரிஷியே! அதனைச் சொல்லும்'' என்று கேட்டார். அதனைக் கேட்ட பிர புத்தர், ''ஸ்திரீயுடன் சேர்ந்து விஷய சுகத்தில் ஆசை கொண்டு துக்கம் வராமலிருப்பதற்காகவும், சுகத்தை அடைவதற்காகவும் ஜனங்கள் கர்மங்களைச் செய்கிறார் கள். ஆனாலும் பயன் அவர்களுடைய இஷ்டப்படி கிடைக் காமல் மாறுகிறது. மேலும் ஜனங்கள் பணத்தை மிகவும் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறார்கள். அது துக்கத்தைக் கொடுக்கக்கூடியது. அதனை விசேஷ முயற்சி செய்து சம்பாதிப்பதால் என்ன பிரயோசனம்? வீடு, குழந்தை கள், பந்துக்கள், பசுக்கள் ஆகிய இவைகள் அனித்தி யங்கள் ஆனதால் இவைகளைச் சம்பாதிப்பதால்தான் என்ன பயன்? இது போலவே பரலோக சுகமும் கர்மத் தால் ஏற்படுபவையானதால் அவையும் நித்தியமானவை அல்ல. சக்கரவர்த்திகளுக்குத் தமக்குச் சமமான சுக முள்ளவர்களிடத்தில் விரோதமும், மேற்பட்டவர்களிடத்

இல் அருசியையும், தம்முடைய சுகம் கெட்டுப்போய்விடுமோ என்ற பயமும் எப்படி உண்டாகிறதோ, அப்படி கர்ம பலத்தால் ஆசைப்பட்டவனுக்குப் பயம் நேரும் என்று தெரிந்துகொள்ளவேண்டும். ஆனதால் மேலான க்ஷேமத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய புருஷன் வேதத்தை முறைப்படி அத்யயனஞ் செய்தவரும், பரப்பிரம்மத்தின் ஸாக்ஷாத்காரமுள்ளவரும், சாந்தியுள்ளவருமான ஆசாரியனைச் சரணமடையவேண்டும். மேலும், அந்த ஆசாரியனுக்கேக கபடமில்லாமல் சிசுருஷை செய்து குருவை ஆத்மாவாகவும், தேவதையாகவும் நினைத்து அவரிடமாகப் பாகவத தர்மங்களை அப்பியசிக்கவேண்டும். அந்தப் பாகவத தர்மத்தால் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாகவும், ஆத்மாவைக் கொடுப்பவருமான பகவான் சந்தோஷப்படுவார். மனத்தால் ஒன்றையும் ஆசிக்காமல் இருப்பது, சாதுக்களிடம் கூடியிருப்பது, தாழ்ந்தவர்களிடத்தில் தயை, ஸமானர்களிடத்தில் சிநேகம், மேற்பட்டவர்களிடத்தில் வணக்கம், மண், ஜலம் முதலியவைகளால் சுத்திசெய்துகொள்வது, வீணான வார்த்தை சொல்லாமல் மௌனமாக இருப்பது, தனக்குரிய தர்மத்தை அனுஷ்டிப்பது, பொறுமை, வேதாத்தியயனம் ரிஜு புத்தியாக இருப்பது; பிரம்மசரியம் (ருது காலம் தவிர ஸ்திரீ சங்கமில்லாதிருப்பது), பிறருக்கு ஹிம்சைசெய்யாமலிருப்பது, சுக துக்கங்களைச் சமமாக நினைப்பது, எல்லாவற்றையும் தானாகவும் ஈசுவரனாகவும் நினைப்பது, ஒன்றியாகச் சஞ்சரிப்பது, வீடு முதலியவைகளில் அபிமானமற்றிருப்பது, ஜனங்களில்லாதவிடத்தில் விழுந்திருக்கும் கந்தை மரப்பட்டை இவைகளை உடுத்திக்கொள்வது, கிடைத்ததில் சந்தோஷப்படுவது, பகவானுடைய குணங்களைச் சொல்லும சாஸ்திரத்தில் சிரத்தை வைப்பது, மற்ற சாஸ்திரங்களை நிந்திக்காமலிருப்பது. பிராணாயாமஞ் செய்து மனத்தை அடக்குவது, மௌனத்தால்

வாக்கை அடக்குவது, பயனில் ஆசைப்படாததால் கர்மத்தை நிக்ரகிப்பது, உண்மை பேசுவது அந்தக்கரணத்தை அடக்குவது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்குவது, அற்புத கர்மங்களைச் செய்த ஸ்ரீமந் நாராயணனை நினைப்பது, அவருடைய திவ்விய நாமங்களை உச்சரிப்பது, சகல கர்மங்களையும் பகவானைப் பூஜிப்பதற்காகச் செய்கிறோமென்று நினைப்பது ஆகிய இவைகளைக் குருமுகமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். மேலும் யாகம் செய்வது, தானம் செய்வது, தவம், நல்ல ஆசாரம், தனக்குப் பிரியமாகிய சந்தனம், புஷ்பம் முதலியவை, களத்திரம், புத்திரன், வீடு, பிராணன் ஆகிய இவைகளைப் பரமாத்மாவினிடம் சமர்ப்பிப்பதையும் குரு முகமாக அப்பியசிக்கவேண்டும். பின்னும் ஸ்ரீ கிருஷ்ணனையே தனக்கு நாதர் என்று நினைத்துப் பக்தர்களிடத்தில் பிரீதிசெய்வதும், ஸ்தாவர ஜங்கமப் பிராணிகளுக்குச் சிசுரூஷை செய்வது, அதிலும் மனிதர்களுக்கு விசேஷமாகச் சிசுரூஷைச் செய்வது, அதிலும் சாதுக்களுக்கு மிகவும் சிசுரூஷை செய்வது, சாதுக்களிடம் சேர்ந்து பரிசுத்தமான பகவானுடைய கீர்த்தியை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வது, ஒருவருக்கொருவர் பகவானுடைய குணங்களில் ரமிப்பது, சந்தோஷப்படுவது, சுகப்படுவது ஆகிய இவைகளை அப்பியசிக்கவேண்டும். இப்படி மனிதர்கள் பகவானிடத்தில் பிரேமை லட்சணமான பக்தியை அடைந்து பாபக் கூட்டத்தை நிவர்த்திப்பவரான ஸ்ரீ ஹரியை நினைத்தும், பிறரை நினைத்துக்கொண்டும், மயிர்க்கூச்சலை அடைவார்கள். சில சமயம் அழுகிறார்கள். சில சமயம் அச்சுதராகிய பகவானைத் தியானித்துச் சிரிக்கிறார்கள். சில வேளை சந்தோஷப்படுகிறார்கள். சில வேளை உலக வியவகாரமற்று நமஸ்கரிப்பார்கள். சில சமயம் நர்த்தனம் செய்கிறார்கள். கானம் செய்கிறார்கள். பகவானுடைய லீலையை அனுசரித்து அபிநயம் செய்

கிறார்கள். இப்படி பரமாத்மாவை அடைந்து ஆனந்த முள்ளவராகி மௌனமாக இருக்கிறார்கள். இப்படி பாகவத தர்மங்களை அப்பியசிக்கவேண்டும். அதனால் பக்தி உண்டாகும். அதனால் நாராயணனையே தியானம்செய்து தாண்ட முடியாத மாயையைச் சீக்கிரத்தில் தாண்டுகிறான்'' என்றார்.

38—44. அதனைக் கேட்ட அரசன், "நீங்கள் பிரம்மத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்தவர்கள். ஆனதால் நாராயணன் என்ற பிரம்மத்தின் சுரூபத்தைச் சொல்லுங்கள். (பகவான் பரமாத்மா என்ற சப்தங்களால் சொல்லப்படும் பிரம்மம் ஒன்றுதானா, அல்லது அதில் விசேஷமுண்டா என்று கருத்து) என்று கேட்டார். அதனைக் கேட்ட பிப்பலாயனர் அரசனை நோக்கி, "இந்த ஜகத்தைப் படைப்பது, காப்பாற்றுவது, சங்கரிப்பது ஆகிய இவைகளுக்கு எவர் காரணமோ, எவருக்குக் காரணமில்லையோ, அவரே பரமாத்மா; அதுவே பரம தத்வம். மேலும் சொப்பனம், ஜாக்ரம், சுஷுப்தி ஆகிய அவஸ்தைகளில் எது தொடர்ந்திருக்கிறதோ, சமாதி முதலியவைகளில் எது தொடர்ந்திருக்கிறதோ அதுவே பரதத்துவம். பின்னும் பிராணன், இந்திரியங்கள், மனம் ஆகிய இவைகள் எவருடைய அனுக்கிரகத்தால் தம் காரியத்தைச் செய்கின்றனவோ, அதுவே பரப்பிரம்மம் என்று தெரிந்துகொள்ளும். (நாராயண முதலிய நாமங்களால் சொல்லப்பட்டாலும் பரதத்துவம் ஒன்றுதான் என்று தாத்பரியம்.) மனம், வாக்கு, கண், புத்தி, பிராணன், மற்ற இந்திரியங்கள் ஆகிய இவைகள் இந்தப் பரமாத்ம தத்துவத்தைப் பிரகாசிக்கச் செய்கிறதில்லை. அக்னியினிடத்திலிருந்து உண்டான நெருப்புப் பொறிகள் அந்த அக்கினியைத் தகிக்குமா? அதனைப் பிரகாசிக்கச் செய்யுமா? (மனம், வாக்கு முதலியவைகளுக்குப்

பரமாத்ம தத்துவம் சக்தியைக் கொடுப்பதானதால் அவைகளால் ஆத்ம தத்துவத்தைப் பிரகாசிக்கச் செய்ய முடியாதென்று கருத்து.) "உபநிஷத்தால் காட்டக் கூடிய அந்தப் புருஷனைக் கேட்கிறோம்" என்ற சுருதியின்படி சப்தத்திற்கு விஷயமானது பிரம்ம தத்துவம் என்று தோன்றுகிறது. ஆனாலும் வேதமானது சப்தங்களை நிஷேதித்து ஆத்ம விஷயத்தில் பிரமாணமாகிறது. நேரில் பிரம்மத்தைச் சொல்லுகிறதில்லை. மற்றவைகளை நிஷேதிப்பதால் பிரம்மத்தைச் சொன்னதாக ஆகிறது. (இதென்று பிரம்மத்தை வேதம் குறிப்பிட்டுக் காட்டாவிடினும் இதல்ல, இதல்லவென்று நிஷேதித்து எஞ்சியது பிரம்மம் என்று நிஷேதிப்பதால் பிரம்மத்தைக் குறிப்பிடுகிறதென்று கருத்து.) பிரம்மம் இல்லாவிடில் வேதத்தில் சொல்லிய நிஷேதம் சித்திக்காது. (ஒன்றிருந்தால் தான் இது அதல்ல, இது அதல்லவென்று சொல்லக்கூடும். ஆனதால் நிஷேதங்கள் எல்லையுள்ளவை என்று தாத்பரியம்) ஸ்தூல சூட்சுமமாகிய பிரபஞ்சம் எல்லாம் பிரம்மமே. ஏனென்றால், பிரம்மம் அவைகளுக்குக் காரணமானதால் காரியம் காரணத்தைக் காட்டிலும் வேறல்லவென்று சுருதி சொல்லுவதால் பிரபஞ்சம் பிரம்மமேயாம். மாயா சக்தியுள்ள அந்த வஸ்து முதலில் சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களுடைய சாமியமாகிய பிரதானமாகவும், பின்பு கிரியா சக்தியால் சூத்திரார்த்தமாகவும், பின்பு ஞான சக்தியால் மகத்தத்துவமாகவும், அதன் பின்பு ஜீவோபாதியான அகங்காரமாகவும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனதால் அந்த அந்த அபிமானி தேவர்களாகவும், இந்திரியங்களாகவும், விஷயங்களாகவும், அவைகளைப் பிரகாசிக்கச் செய்வதாகவும் பிரம்மமே விளங்குகிறது. மேலும் பரமாத்மா உண்டாகிறதில்லை; மரணம் அடைகிறதில்லை:

பருக்கிறதில்லை; [விருத்தி, பரிணாமம் முதலிய விகாரங்கள் இல்லை என்று கருத்து.] இளைக்கிறதில்லை; பால்யம் யௌவனம் முதலிய அநித்தியமான அவஸ்தைகளின் காலத்தைப் பார்ப்பவர்; (மேற்காட்டிய அவஸ்தைகள் அவருக்கு இல்லையென்று கருத்து.) எல்லா இடங்களிலும், எப்பொழுதும் நாசமற்ற ஞான சுரூபமாக இருப்பவர். (கருமை என்ற ஞானம் உண்டாயிற்று, மஞ்சள் நிறமென்ற ஞானம் நசித்தது என்று தோன்றுகிறதால் ஞானத்தை நித்தியமென்று சொல்வது பொருந்துமா என்றால் சமாதானம் சொல்லப்படுகிறது.) ஞானம் நித்தியமானதே. இந்திரியங்களால் விகற்பிக்கப்பட்ட கருமை, மஞ்சள் என்ற விருத்திகள் நசிக்கின்றனவேயொழிய ஞானத்திற்கு ஒருகாலும் நாசமில்லை. ஜராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜ்ஜம் என்ற நான்கு வகையான பிராணிகளிடத்தில் பிராணன் ஜீவனை அனுசரிக்கிறான். இந்திரியங்களும் (ஜாக்ரத்தில்) அகங்காரமும் (சொப்பனத்தில்) லயத்தை அடைந்திருக்கும் பொழுது லிங்க சரீரம் இல்லாததால் (உபாதியில்லாததனால்) ஆத்மா விகாரமற்றவனாக இருக்கிறான். அதனால்தான் ஆத்மாவினுடைய ஞாபகம் நமக்கு உண்டாகிறது. (சுகமாகத் தூங்கினேன். ஒன்றையும் அறியவில்லை என்று தூங்கி விழித்தவுடன் நினைக்கிறானல்லவா? சுஷுப்தி காலத்தில் இந்திரியம் முதலிய எல்லாம் அடங்கியிருந்ததால் ஆத்மா சுத்தமாகவும், விசேஷ ஞானமில்லாமல் சுக சுரூபியாகவும், சுஷுப்தி சாட்சியாகவும் இருப்பதால் தூங்கி விழித்தவுடன் மேற்காட்டியவண்ணம் நினைக்கிறான். ஆனாலும் அவித்யை அதன் சம்ஸ்காரங்கள் ஆகிய இவைகளிருப்பதால் பின்பு விஷயங்களில் பிரவிருத்தி உண்டாகிறது.) எப்பொழுது ஸ்ரீமந் நாராயணனுடைய பாதத்தைத் தியானித்து (மற்ற ஆசை

களை யொழித்து அதனாலுண்டாகிய பக்தியால் (பக்தியாகிய ஜலத்தால்) மனத்திலுள்ள அழுக்குகளைக் கழுவிச் சுத்தம் செய்துகொள்ளுகிறானோ, அப்பொழுது நிர்மல சுத்தமான மனத்தில் ஆத்ம தத்துவம் பிரகாசிக்கும். சுத்தமான கண்களுக்குச் சூரியனுடைய பிரகாசம் தோன்றுகிறதல்லவா'' (ஆத்ம வஸ்து ஸித்த வஸ்துவானதால் சித்தம் சுத்தமானவுடன் தோன்றுமென்று கருத்து) என்று சொன்னார்.

45-59. அதனைக் கேட்ட நிமியென்ற அரசன் யோகிகளை நோக்கி, "எதனை யநுஷ்டித்தால் புருஷன் இவ்வுலகத்தில் சகல கர்மங்களை விட்டு மேலான ஞானத்தை அடைவானோ, அந்தக் கர்மயோகத்தைச் சொல்லுங்கள். இந்த விஷயத்தை முன்னொருகால் இக்ஷ்வாகுவின் முன்பாக, பிரம்மபுத்திரர்களான ஸனகர் முதலியவர்களைக் கேட்டேன். அவர்கள் (எல்லாவற்றையும் அறிந்தவர்களானாலும்) பதில் சொல்லவில்லை. அதன் காரணம் என்ன? சொல்லவேண்டும்" என்று கேட்டார். அதனைக் கேட்ட ஆவிர்ஹோத்திரர் என்பவர் அரசனை நோக்கி, "கர்மம், அகர்மம், விகர்மம் என்று வேதத்தில் மூன்று வகை சொல்லப்பட்டிருக்கிறது. அது லௌகிகமல்ல. வேதம் ஈசுவர ஸ்வரூபமானதால் அதன் தாத்பரியத்தைத் தெரிந்துகொள்வதில் வித்வான்களும் மோகிக்கிறார்கள். (புருஷனுடைய வாக்கியத்தில் சொன்னவனுடைய அபிப்பிராயத்தின்படி அர்த்தம் கண்டுபிடிக்கலாம். வேதம் புருஷனால் செய்யப்படாததானதால் முன்பின் சொல்லியிருப்பதை ஆலோசித்து அர்த்தம் கண்டுபிடிக்கவேண்டுமானதால், அது சிரமமான காரியமென்று தாத்பரியம். வேதத்தில் எதைச் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறதோ, அது கர்மமெனப்படுகிறது. எது செய்யக்கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறதோ அது அகர்மம்

விகித கர்மத்தைச் செய்யாமலிருப்பது விகர்மம்) இந்த வேதமானது விஷயங்களைப் பரோக்ஷமாகச்சொல்லுகிறது. குழந்தைகளுக்குத் தகப்பன் வியாதி நிவர்த்திக்காக மருந்து கொடுக்க விரும்பி இது கற்கண்டு, இது தித்திக்கும் என்று சொல்லி மருந்தைக் கொடுக்கவில்லையா? அதுபோல் வேதமும் மறைபொருளாகச் சொல்லுகிறது. கர்மங்களை விடுவதற்காகவே கர்மங்களைச் செய்யவேண்டுமென்று விதிக்கிறது. ஆனாலும் முதலிலேயே கர்மத்தை விடக்கூடாது. இந்திரியங்களை ஜயிக்காத அக்ஞன் வேதத்தில் சொல்லப்பட்ட கர்மங்களை அநுஷ்டியாமல் விட்டுவிடுவானானால், விகித கர்மங்களை அநுஷ்டிக்காததனால் அதர்மம் உண்டாகிறது. அதனால் ஜனன மரணமாகிய ஸம்ஸாரத்தை அடைகிறான். ஆனதால் வேதத்தில் சொல்லிய கர்மங்களை அநுஷ்டித்து அதன் பயனில் ஆசை கொள்ளாமல் அதனைப் பகவானிடத்தில் சமர்ப்பிக்கவேண்டும். கர்மத்தில் சிரத்தை உண்டாவதற்காகக் கர்மத்தால் இந்தப் பயன் கிடைக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (கர்மத்திற்குப் பயனைச் சொன்னால் அதைச் செய்யவேண்டுமென்று சிரத்தை உண்டாகும். இதற்கு இவ்வளவு பயனிருக்கிறதே, இதற்கும் மேலான பயனைக் கொடுக்கக்கூடிய கர்மமிருக்கிறதோ என்று விசாரிப்பான். விசாரித்தால், யாகம் முதலிய சகல கர்மங்களுக்கும் ஞானமே பயனென்று தெரிந்துகொள்வான். அதன் பின்பு நிஷ்காமமாகக் கர்மங்களை அநுஷ்டிப்பான். அப்படி அநுஷ்டிப்பதால் ஆத்மஞானத்தை அடைவானென்று கருத்து) (இதுவரையில் வைதிகமான கர்மயோகம் சொல்லப்பட்டது. இனி, தாந்திரிகமான கர்மயோகஞ் சொல்லப்படுகிறது) பரமாத்ம சுரூபியான ஜீவனுடைய அகங்காரத்தை நிவர்த்தித்துக்கொள்ள விரும்பியவன் ஆத்மசாஸ்திரத்தில் சொல்லியபடி

பகவானை உபாஸிக்கவேண்டும். எப்படியென்றால், ஆசாரியனிடம் அநுக்கிரகம் பெற்று அவனிடம் பூஜா விதியைத் தெரிந்துகொண்டு (ராமன், கிருஷ்ணன் முதலிய) மகாபுருஷனைப் பூஜிக்கவேண்டும். சுத்தனாக அந்த மூர்த்திக்கு எதிரில் உட்கார்ந்து பிராணாயாமம், பூதசுத்தி முதலியவைகளால் தேகத்தைச் சோதித்து அங்கநியாஸங்களால் சரீர ரட்சை செய்துகொண்டு பகவானைப் பூஜிக்கவேண்டும். பிரதிமை, ஹிருதயம் முதலியவைகளில் கிடைத்த பூஜா திரவியங்களைக்கொண்டு பூஜிக்கவேண்டும். முதலில் பூமியைச் சுத்தஞ்செய்துகொள்ளவேண்டும். பின்பு, புஷ்பம் முதலியவைகளைப் புழு முதலியவைகளில்லாமல் சோதிக்கவேண்டும். பூதசுத்தி முதலியவைகளால் சரீரத்தைச் சோதிக்கவேண்டும்; பகவத்பிரதிமைகளை ஜலத்தால் அலம்புவது முதலியவையால் சோதிக்கவேண்டும். ஆசனத்தைத் தீர்த்தத்தால் புரோக்ஷிக்கவும், பாத்யம் முதலியவைகளைச் சித்தமாக வைத்து பிரதிமையில் ஆவாகனஞ்செய்து ஹிருதயம் முதலிய அங்கநியாஸஞ் செய்துகொண்டு மூலமந்திரத்தை உச்சரிக்கவேண்டும். ஹிருதயம் முதலிய அங்கங்கள், சுதர்சனம் முதலிய உபாங்கங்கள், பரிவாரங்கள் இவைகளுடன் பகவானுடைய சாந்தமான மூர்த்தியைப் பாத்யம், அர்க்கியம், ஆசமனீயம், ஸ்நானம், வஸ்திரம், ஆபரணம், சந்தனம், புஷ்பம், அக்ஷதம், புஷ்பமாலை, தூபம், தீபம், நைவேத்யம் முதலிய உபசாரங்களால் பூஜித்து, தோத்திரஞ்செய்து நமஸ்கரிக்கவேண்டும். நிர்மால்யத்தைத் தலையில் வைத்துக்கொண்டு பிரதிமையானால் சம்புடத்திலும், வேறானால் ஹிருதயத்திலும் வைத்துக்கொள்ளவும்.

## நோட்டு

**வீரராகவீயத்தில்—** ஜகத்ரூபமாக ஆகவேண்டுமென்று விரும்பிய பரமபுருஷன் எதனைக்கொண்டு இந்த ஜகத்தைப் படைத்தாரோ, அது மாயை. ஸத்துவம் முதலிய குணங்களற்றதும் சரீர சம்பந்தமில்லாததும், தானாகப் பிரகாசிப்பதுமான சுரூபத்தில் சரீர சம்பந்தமுள்ளதென்றும் தேகமே ஆத்மாவென்ற பிரமம் முதலிய விபரீத ஞானம் எதனால் உண்டாகிறதோ அது மாயை. **ஜாக்ரம்:—** ஜாக்ரதவஸ்தையில் இந்திரியங்கள் தேகம் முதலிய விஷயங்களில் பிரவேசிப்பதால் தேகம் முதலியவைகளே ஆத்மாவென்றும் ஸ்திரமென்றும் பிரமம் உண்டாகிறது. சொப்பனத்தில் கண்ட சரீரங்கள் ஸ்திரமென்று நினைப்பது அந்தக்கரணத்தாலுண்டான பிரம்மம். சுஷுப்தி அவஸ்தையில் இந்திரியங்களும் அந்தக்கரணமும் இல்லாதிருப்பதால் இரண்டு அவஸ்தைகளிலும் ஏற்பட்ட வாசனையாகிற விதை எஞ்சியிருக்கிறது. இம் மூன்றும் பிரகிருதியின் குணம். ஆனதால் இந்த மூன்று அவஸ்தைகளும் எப்பொழுது ஜீவனுக்கு இல்லாமல் இருக்குமோ அந்த அவஸ்தையே துரீயாவஸ்தை எனப்படுகிறது. ஜீவனுடைய சுரூபமானது உண்மையில் சுத்தமானது. ராகம், துவேஷம் முதலியவைகளுடைய சம்பந்தமற்ற ஜாக்ரம் முதலிய அவஸ்தைகளற்றது; ஞான சுரூபமானது, அப்படியிருந்தும் பிரகிருதி பரிணாமமாகிய சரீரத்தின் சம்பந்தத்தால் இந்திரியங்கள், அந்தக்கரணம், வாசனை பீஜம் இவைகளால் மூன்று அவஸ்தைகளுள்ளதாகத் தோற்றுகிறது. சொப்பனத்தில் காணப்படும் வஸ்துக்கள் அநித்தியங்களானாலும் நித்தியம் போலத் தோற்றவில்லையா? இப்படி மூன்று அவஸ்தைகள் உள்ளதாகத் தோற்றுவதும், அதற்குக் காரணமாகிய தேகம் இந்திரியம் இவைகளில் தொடர்ந்திருப்பது முதலியவையெல்லாம் ஞான சுரூபியாகிய பிரத்யகாத்மாவிடத்தில் புண்ணிய பாபங்களின் பயனேயாம். ஆத்மாவிடத்தில் மாயா காரியமான மூவகையானது, அனித்தியமானதாலும் [முக்தி காலத்தில் இல்லை] அவஸ்தா விசேஷத்தில் இல்லாததாலும் இயற்கையல்ல; கர்மத்தின் பயனே. சொப்பனத்தில் உண்டான சுகம் எப்படி கர்மத்தின் பயனோ, அனித்தியமோ,

அப்படி அவஸ்தைகளும் கர்மத்தின் பயனேயாம் என்று தெரிந்து கொண்டவன் அற்ப சுகத்தில் ஆசைப்படாமல் சாந்தியடைவான். விராட்;— பிரம்மாண்டம் ஜலத்தில் மிதக்கிறது. அதன் உள்ளிருக்கும் ஜீவ வர்க்கமானது பிரதானத்தை அடைகிறது. ஆரியமை:— "உடைந்த ஓடத்தில் ஏறிச் சென்ற புருஷன் எப்படிக் கரை சேரமாட்டானோ, அப்படி ஞானமில்லாத புருஷனை அடைந்தவன் மோட்சத்தை அடையமாட்டான்."

---

# அத்தியாயம் 4

## நாராயண மகரிஷியின் மகிமை

1—8. நிமி என்ற அரசன் நவயோகிகளை நோக்கி, "ஸ்ரீ ஹரியானவர் தமதிஷ்டப்படி அவதரித்து எந்தெந்தக் கர்மங்களைச் செய்தார்? எவைகளைச் செய்வார்? அதனைச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அதனைக் கேட்ட திரமிளரென்பவர் அரசனை நோக்கி, "அனந்தராகிய பகவானுடைய குணங்கள் அனந்தங்கள். அவைகள் எல்லாவற்றையும் சொல்லுகிறதாக நினைப்பவன் மூடன். பூமியிலிருக்கும் தூளிகளைச் சில காலத்தில் பிரித்தெண்ணினாலும் எண்ணலாம்; சகல சக்திகளுக்கும் இருப்பிடமான பகவானுடைய குணங்களை எண்ண முடியாது. அப்படிப்பட்ட ஆதி தேவராகிய நாராயணன் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட மகா பூதங்களால் பிரம்மாண்டமாகிய பட்டணத்தை நிருமித்து அதில் தம்முடைய அம்சமாகப் பிரவேசித்துப புருஷனென்ற பெயரை அடைந்தார். எவருடைய சரீரமானது இந்த மூன்று உலகங்களுக்கும் ஆதாரமாகவும், ஆதேயமாகவும் இருக்கிறதோ, எவருடைய இந்திரியங்களால் பிராணிகளுடைய இந்திரியங்கள் தங்கள் தங்கள் சகதியை அடைகின்றனவோ, எவருடைய ஞானம் இயற்கையானதோ, எவருடைய

பிராணனிடத்திலிருந்து சகல பிராணிகளுக்கும் தேக பலம், இந்திரிய சக்தி, கிரியை முதலியவை உண்டாகின்றனவோ, சத்துவம் முதலிய குணங்களால் எவர் இந்த உலகத்தைப் படைத்துக் காப்பாற்றிச் சங்கரிக்கிறாரோ, அந்த ஆதிகர்த்தா நாராயணனேயாம். எவருடைய ரஜோ குணத்தால் முதலில் பிரம்மதேவர் இந்த உலகத்தைப் படைத்தாரோ, எவருடைய சத்வ குணத்தால் விஷ்ணு இந்த உலகத்தைச் சம்ரட்சிக்கிறாரோ, அந்த விஷ்ணு யாகங்களுக்கு அதிபதியாகவும் அவைகளின் பயனைக் கொடுப்பவர் பிராம்மணர்களையும், அவர்களுடைய தர்மத்தையும் காப்பாற்றுபவராகவும் இருக்கிறாரோ, எவருடைய தமோ குணத்தால் ருத்திரன் ஜகத்தை சம்ரட்சிக்கிறாரோ, இப்படி பிரம்மா முதலியவர்கள் எவருடைய அனுக்கிரகத்தால் இந்த உலகத்தைப் படைப்பது, ரட்சிப்பது, சங்கரிப்பது முதலியவைகளைச் செய்கிறார்களோ, அவரே முதன்மையான புருஷன். தட்சருடைய புத்திரியான மூர்த்தி என்பவளிடத்தில் தர்மருக்கு நாராயணன், நரன் என்ற இரண்டு ரூபமாகப் பகவான் அவதரித்தார். அந்தப் பகவதம்சத்தை மகரிஷிகள் எல்லோரும் புகழ்கிறார்கள். அந்த நாராயணன் தபஸ்வி, மிக்க சாந்தர். அவர் நாரதர் முதலியவர்களுக்கு ஆத்ம சுரூபத்தை உபதேசித்தார். தாமும் அனுஷ்டித்தார். அதனைக் கண்ணுற்ற மகேந்திரன், 'இவர் என்னுடைய ஸ்தானத்தை அடைய விரும்புகிறார்' என்று சந்தேகித்து அப்சரசுக்களைப் பதரிகாசிரமத்திற்கு அனுப்பினார். பின்பு அப்சரசுக்களின் கூட்டமும், வசந்த ருதுவும், தென்றற் காற்றும் அவருடைய ஆசிரமஞ் சென்றன. அந்தக் கூட்டமானது நாராயணருடைய மகிமையை அறியாமல் ஸ்திரீகளுடைய பார்வையாகிய பாணத்தால் மகரிஷியை அடித்தது (ஆசைப்படச் செய்தது). அப்பொழுது மக

ரிஷி இந்திரனால் செய்யப்பட்ட அபராதமென்று தெரிந்து கொண்டார். மகரிஷிக்கு உண்மை தெரிந்ததென்பதை உணர்ந்து அந்த அப்சரஸ் முதலியவர்கள் பயந்து நடுங்கினார்கள். அவர்களை நோக்கி மகரிஷியானவர், "ஓ தேவ ஸ்திரீகளே! உங்களுக்கு அதிதி பூஜை செய்கிறேன்: அதனைப் பெற்றுக்கொள்ளுங்கள். இந்த ஆசிரமத்தில் வசித்து இதனைப் பயனுள்ளதாகச் செய்யுங்கள்; பயப்படவேண்டாம்" என்று கர்வமில்லாமல் சொன்னார்.

9—11. ஓ மகாராஜ! அபயத்தைக் கொடுப்பவரான நாராயண மகரிஷி இப்படிச் சொல்ல அதனைக் கேட்ட தேவர்கள் வெட்கத்தால் தலை வணங்கி, 'ஓ பிரபுவே! நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர்; விகாரமற்றவர்; ஆத்மாராமர்களும், தீரர்களுமான யோகிகளால் நமஸ்கரிக்கப்பெற்ற பாதாரவிந்தமுள்ளவர்; அப்படிப்பட்ட மகிமையுள்ள நீர் எங்களைக் கண்டு மனங் கலங்காமலிருப்பது, எங்களிடத்தில் தயை செய்வது முதலியவை ஆச்சரியமல்ல. மேலும், சுவர்க்கம் முதலிய சொற்ப சுகத்தை விரும்பாமல் உம்முடைய ஸ்தானத்தை அடைவதற்காக உம்மைச் சேவிப்பவர்களுக்குத் தேவர்கள் விக்கினத்தைச் செய்கிறார்கள். [தங்களுடைய உலகத்தையும் தாண்டி மேலான சுகத்தை அடைவதற்கு முயற்சிப்பதால் தடை செய்கிறார்களென்று கருத்து.] யாகங்களைச் செய்து தேவர்களுக்கு ஹவிர்ப்பாகங் கொடுத்து அவர்கள் இடையூறு செய்வதில்லை. நீர் சகல தேவர்களுக்கும் அதிபதியானதால் உம்மைச் சேவிக்கும் பக்தர்களைக் காப்பாற்றுகிறீர். ஆனதால் அவர்கள் விக்கினங்களுடைய தலையை மிதிக்கிறார்கள். உம்மிடத்தில் பக்திசெய்யாமல் தபசை மாத்திரம் அனுஷ்டிப்பவர்கள் பசி, தாகம், குளிர், உஷ்ணம், பனி, காற்று, நாக்கின் ருசி, சிசினத்தின் உபயோகம் முதலியவைகளுள்ள எங்களை அடைந்து

விஷய சுகத்தை அனுபவிப்பார்கள். சில தபஸ்விகள் மேற்காட்டிய சுகமுள்ள எங்களை லட்சியஞ் செய்யாமல் கோபித்துக்கொள்வார்கள். அதனுல் அவர்கள் விஷய போகங்களையும் இழந்து கஷ்டப்பட்டுச் செய்த தவத்தை யும் இழந்துவிடுவார்கள். அது நதியைத் தாண்டி மாட்டின் குளம்படி போன்ற சொற்ப இடத்தில் தலையிலிருக் கும் மூட்டையைப் போடுகிறவன் போலாகிறது. (தபஸ்வி களாயினும் கோபிப்பார்களானுல் விஷய போகங்களையும் இழந்து புண்ணியத்தையும் இழந்துவிடுகிருர்களென்று கருத்து)" என்று கருணை உண்டாகும்படி சொன் ஞர்கள்.

15—16. அதனைக் கேட்ட நாராயண மகரிஷி தம்முடைய யோக மகிமையால் உண்டுபண்ணப்பட்டவர்களும், மிக்க அலங்காரமுள்ளவர்களும், தமக்குச் சிசுருஷை செய்பவர்களுமான ஸ்திரீகளைத் தேவர்களுக்கும் தேவ ஸ்திரீகளுக்கும் காண்பித்தார். (அவர்களுடைய கர்வத்தை அடக்குவதற்காக) அந்த ஸ்திரீகள் லக்ஷ்மீ தேவியைப்போலிருந்தார்கள்; அவர்களுடைய ரூபம் காம்பீரியம் இவைகளைப் பார்த்து அந்தத் தேவஸ்திரீகள காந்தியற்ற வர்களாகி அவர்களுடைய வாசனையை மோந்து மோகித் தார்கள். அப்பொழுது நாராயண மகரிஷி தேவஸ்திரீ களை நோக்கி, "இந்த ஸ்திரீகளுக்குள் யார் உங்களுக்குச் சமமான ரூபமுள்ளவளோ, அவளைச் சுவர்க்கத்துக்கு அழைத்துப் போகலாம். உங்களுக்குச் சமமானவள் ஒருவருமில்லை என்று சொல்வீர்களானுல் யார் சுவர்க்கத் துக்கு ஆபரணம்போல் அழகாகவிருப்பாளோ, அவளை அழைத்துப் போகலாம்" என்ருர். அதனைக் கேட்ட தேவஸ்திரீகள் 'அப்படியே செய்கிருேம்'மென்று சொல்லி, அவரை நமஸ்கரித்து, அப்ஸரஸ்களுக்குள் சிறந்தவளான ஊர்வசியை அழைத்துக்கொண்டு சுவர்க்கலோகம்

சென்றார்கள். மேலும் அவர்கள், சுதர்மா என்ற சபையில் மகேந்திரனை நமஸ்கரித்து, சகல தேவர்களும் கேட்டுக்கொண்டிருக்க நாராயண மகரிஷியின் மகிமையைத் தெரிவித்தார்கள். அதனைக் கேட்டுத் தேவேந்திரன் ஆச்சரியமடைந்து நடுங்கினான்.

17—23. "ஸ்ரீ மகாவிஷ்ணு ஹம்ஸாவதாரம் செய்து ஆத்ம யோகத்தைச் சொன்னார். மேலும் தத்தாத்திரேயர், சனகர் முதலியவர்கள், நமதுடைய பிதாவாகிய ரிஷபர் ஆகிய இவர்களுடைய சுரூபியாக அவதரித்து ஆத்ம யோகத்தைச் சொன்னார். பின்னும் அந்த மகாவிஷ்ணு ஹயக்ரீவ அவதாரம் செய்து வேதங்களைத் திருப்பிக்கொண்டுவந்தார். (மது என்ற அசுரனால் அபகரிக்கப்பெற்ற வேதங்களைத் திருப்பிக்கொண்டுவந்தார்.) மீனாக அவதரித்துப் பூமியையும், ஓஷதிகளையும் காப்பாற்றினார். வராகாவதாரம் செய்து இரண்யாட்சனைக் கொன்று ஜலத்திலிருந்து பூமியை உயரத் தூக்கினார். தேவர்களும் அசுரர்களும் அமிருதம் கடையும்பொழுது ஆமையுருவங் கொண்டு (கூர்மாவதாரம் செய்து) தம் முதுகில் மந்தர மலையைத் தாங்கினார். பின்னும் அந்த மகாவிஷ்ணு முதலையால் பிடிக்கப்பட்டு உபத்திரவத்தை அடைந்த யானையைச் சம்ரட்சித்தார். பின்னும் அவர் சமுத்திரத்தில் விழுந்து கரையேற முடியாமல் தோத்திரம் செய்தவர்களான மகரிஷிகளைக் காப்பாற்றினார். (கச்யபருக்காக ஸமித்து வெட்டிவருவதற்காக வாலகில்யர்கள் சென்று சமுத்திரத்தில் விழுந்தார்கள். அதனைக் கண்ணுற்ற மகேந்திரன் பரிகாசம் செய்தான். அப்பொழுது பகவான் அவர்களைக் காப்பாற்றினார்.) விருத்திராசுரனைக் கொன்று

பிரம்மஹத்தி தோஷத்தை அடைந்த மகேந்திரனுடைய பாபத்தை நிவர்த்தித்துச் சம்ரட்சித்தார். நரசிம்மமாக அவதரித்து இரண்ணியகசிபுவைக் கொன்று அவனால் சிறைப்படுத்தப்பட்டிருந்த தேவஸ்திரீகளை விடுவித்து சாதுக்களுக்கு அபயத்தைக் கொடுத்தார். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நேர்ந்தால் அதில் அசுரர்களை ஜயித்துத் தேவர்களைக் காப்பாற்றுகிறார். ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் அம்சாவதாரங்களைச் செய்து உலகங்களைச் சம்ரட்சிக்கிறார். பின்னும் அவர் வாமனராக அவதரித்துப் பலியினிடத்தில் பூமியையாசித்து அதைத் தேவர்களுக்குக் கொடுத்தார். இன்னும் அவர் ஹைஹய குலத்தை எரிப்பதற்கு அக்கினியாகப் பிருகு வம்சத்தில் பரசுராமனாக அவதாரஞ் செய்து பூமியிலுள்ள துஷ்ட அரசர்களை இருபத்தொரு தடவை கொன்றார். பின்னும் அவர் ஸ்ரீ ராமனாக அவதரித்து, சமுத்திரத்தில், அணைகட்டி ராவணனைக் கொன்று, உலகத்தில் தமது கீர்த்தியை நிலைநிறுத்திப் பிரகாசிக்கிறார். அப்படிப்பட்ட பகவான் உற்பத்தியற்றவரானாலும் யது குலத்தில் அவதரிக்கிறார். இனி இவர் புத்தராக அவதரித்து யாகம் செய்யத் தகாதவர்களும், யாகஞ் செய்பவர்களுமான அசுரர்களை வாதத்தால் மோகிக்கச் செய்வார். பின்னும் அவதரித்து, கலியுகத்தில் சூத்திரர்களான அரசர்களைக் கொல்வார். ஜகத்திற்கு அதிபதியும், மிக்க கீர்த்தியுள்ளவருமான பகவானுடைய பல அவதாரங்களுடைய சரித்திரங்களும் இம்மாதிரியானவை. அவைகளைச் சொல்லுவேன்" என்றார்.

---

# அத்தியாயம் 5

## பகவானிடத்தில் பக்தி செய்யாதவர்களின் கதி

நிமி என்ற அரசன் நவயோகிகளை நோக்கி, "ஓ ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களுள் சிறந்தவர்களே! பகவானாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவை எவர்கள் பூஜிக்கவில்லையோ, எவர்கள் மனதை ஜயிக்காமல் விஷயங்களில் நோக்கமுள்ளவர்களோ, அப்படிப்பட்ட பக்தி இல்லாதவர்களுக்கு என்ன கதி கிடைக்கும்? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார் (பகவானிடத்தில் பக்தி செய்யாதவர்களுக்கு விக்கினமுண்டாகும் என்று முன் அத்தியாயத்தில் சொல்லியிருப்பதால் அவர்களுக்கும் என்ன கதி என்று கேட்கலாயிற்று.)

2--17. அதனைக் கேட்ட சமஸர் என்பவர் அரசனை நோக்கி "புருஷோத்தமருடைய முகம், கை, தொடை, கால் இவைகளிலிருந்து பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்ற ஜாதிகள் ஆசிரமங்களுடன் முறையே குண பேதத்தால் உண்டாயின. (சத்வ குணத்தால் பிராம்மணனும், சத்வம் ரஜஸ் இவைகளால் க்ஷத்திரியனும், ரஜஸ் தமஸ் இவைகளால் வைசியனும், தமோ குணத்தால் சூத்திரனும் என்று கருத்து) இவர்களில் எவர்கள் 'நாம் பகவானிடத்திலிருந்து உண்டானோம்' என்று தெரிந்துகொண்டாவது தெரிந்துகொள்ளாமலாவது ஈசுவரனை உபாசியாமல் இருக்கிறார்களோ, அவர்கள் தங்களுடைய வர்ணாசிரமத்தை விட்டுக் கீழே விழுகிறார்கள். ஆனால் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கதையைக் கேட்காதவர்களும், பகவானுடைய திவ்விய நாமங்களை உச்சரிக்காதவர்களுமான ஸ்திரீகள் சூத்திரர்கள் ஆகிய இவர்களிடத்தில் உம்மைப் போன்ற சாதுக்கள் தயை செய்யவேண்டும். (அறியாத்தன்மையால் பகவானை உபாசிக்காமலிருப்

யவர்கள் அனுக்கிரகிக்கப்படுவார்களென்று கருத்து) பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் ஆகிய இவர்கள் உபநயனம், அத்யயனம் முதலிய சுருதியில் சொல்லிய சம்ஸ்காரமுள்ளவர்களானதால் அவர்கள் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாதத்தை அடைவதற்குரிய உபாயத்தை அனுஷ்டிப்பதற்கு அதிகாரமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் வேதத்தில் சொல்லிய அர்த்தவாதங்களால் மோகித்து, சுவர்க்கம் முதலிய பயனை அடைய விரும்பி, கர்மங்களை அனுஷ்டிக்கிறார்கள். மேலும் அவர்கள் தேன் போன்ற வேத வாக்கியத்தில் (அர்த்தவாதம்) ஆசைகொண்டு நாங்கள் இந்தக் கர்மத்தை அனுஷ்டித்துச் சுவர்க்கம் சென்று அப்சரசுக்களுடன் சுகமாக விளையாடப் போகிறோம் என்று பிரியமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். பின்னும் அவர்கள் கர்மங்களை அனுஷ்டித்தாலும் அவைகள் பந்தமாகாமலிருக்கும்படி அனுஷ்டிக்கத் தெரியாதவர்கள். தம்மைத் தெரிந்தவர்களாக நினைத்துக்கொண்டவர்களானதால் வணக்கமில்லாதவர்கள். அதனால் அவர்கள் பெரியவர்களைக் கேட்டும் தெரிந்துகொள்ளுகிறதில்லை. பின்னும் அவர்கள் சர்ப்பங்கள் போல் மிகக் கோபமுள்ளவர்கள். ரஜோகுணம் உள்ளவர்களானதால் அபிசாரம் முதலிய கோரமான காரியங்களையே சங்கற்பிப்பவர்கள்; அகங்காரம் உள்ளவர்கள்; பாபிகள்; கீர்த்தியில் நோக்கமுள்ளவர்கள்; ஸ்திரீகளிடத்தில் ஆசை கொண்டவர்கள்; ஆனதால் அவர்கள் ஈசுவர பக்தர்களைப் பரிகாசம் செய்வார்கள். எவர்கள் ஸ்திரீகளையே உபாசித்துக்கொண்டும் (பெரியோர்களை உபாசியாமல்) இருக்கிறார்களோ, எவர்களுடைய வீட்டில் அதிதி பூஜை முதலிய நற்காரியங்கள் நடைபெறாமல் இருக்கின்றனவோ எவர்கள் ஸ்திரீகளுடைய புணர்ச்சியிலேயே நோக்கமுள்ளவர்களாக இருக்-

கிருர்களோ, அவர்கள் இது என்ருல் அடையப்பட்டது; இதனை அடையப் போகிறேன்; இது இருக்கிறது; இது கிடைக்கப்போகிறது என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். மேலும் அவர்கள் அன்னம், தட்சிணை இவைகளை விதிப்படி கொடாமல் யாகம் செய்கிருர்கள். பின்னும் அவர்கள் இம்மையிலுள்ள தோஷத்தை அறியாமல் ஜீவஹத்தியாகப் பசுக்களைக் கொல்வார்கள்; பின்னும் அவர்கள் பணம் முதலிய சம்பத்து, அதிபதியாக இருப்பது, மேலான குலத்தில் பிறந்திருப்பது, வித்தை கொடுப்பது, அழகு, பலம், யாகம் முதலிய கர்மங்கள் ஆகிய இவைகளால் கர்வமடைந்து விவேகமற்று, பகவானையும் அவருடைய பக்தர்களான சாதுக்களையும் அவமதிப்பார்கள். மேலும் அவர்கள் சகல பிராணிகளிடத்திலும் ஆத்மாவாகவும், ஈசுவரனாகவும் இருப்பதையும், ஆகாயம் எங்கும் வியாபித்திருந்தாலும் ஒன்றிலும் சம்பந்திக்காமல் இருப்பதுபோலப் பகவான் ஒன்றிலும் சம்பந்திக்கிறதில்லை என்பதையும், எல்லாராலும் அடையத் தகுந்த புருஷார்த்தமென்று வேதங்களால் நிரூபிக்கப்பட்டவரென்பதையும் அறியாமல் ஸ்திரீகளுடைய சம்போகம், மத்தியபானம் முதலியவைகளை வேதங்கள் நிரூபிக்கின்றன என்று சொல்லுகிருர்கள். (நிவர்த்தி மார்க்கத்தைச் சொல்லும் வேதத்தைப் பிரவர்த்தி மார்க்கத்தைச் சொல்லுகின்றன என்று கருத்து.) ஸ்திரீ சங்கமம், மாமிசத்தைப் புசிப்பது, மத்தியங் குடிப்பது ஆகிய இவைகள் வேதத்தில் சொல்லிய விஷயங்களானாலும் அந்த வேத வாக்கியங்களுக்குப் பின் வருமாறு அர்த்தங் கொள்ளவேண்டும். எப்படி என்ருல் ஸ்திரீ சங்கமம், மாமிச போஜனம், மத்திய பானம் இவைகளைச் செய்ய வேண்டும் என்று வேதம் விதிக்கவில்லை. இவைகளைச் செய்ய மனிதன் விரும்புவானானல் ருது காலத்தில் ஸ்திரீ

சங்கமம் செய்யட்டும்; யாகத்தில் மாம்சத்தைப் புசிக்கட்டும். ஸௌத்திராமணியில் மத்திய பானம் செய்யட்டும்; மற்ற காலங்களில் செய்யவேண்டாம் என்று அவைகளுக்கு வேதத்தில் காலம் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனாலும் அவைகளைச் செய்யாமல் அவைகளிலிருந்து நிவர்த்தி அடைவதே மேலானது என்பது அந்த வாக்கியங்களுக்கு முக்கிய கருத்து. மேலும், மேற்காட்டிய மூடர்கள் பணத்தைச் சரீரம் முதலியவைகளுக்காக உபயோகப்படுத்துகிறார்கள் அதனுடைய பயனை அறியாமல் மிக்க வீரியமுள்ள சம்ஸாரத்தை அடைந்து கஷ்டப்படுகிறார்கள். பணத்தால் தர்மத்தையே சம்பாதிக்கவேண்டும். அதனால் ஞானம், அபரோக்ஷ ஞானம்; அதன் பின் மோக்ஷம் இவைகள் உண்டாகின்றன. (பரமாத்மாவை அடைவதற்கு சாதனமாகிய தர்மத்தைச் சம்பாதிப்பதற்காகவே பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனை விஷயத்தில் உபயோகப்படுத்துகிறதில்லை என்று கருத்து.) மேலும், ஸௌத்திராமணியில் மத்தியத்தை முகக்கலாமென்று சொல்லப்பட்டதே யொழியத் தமது இஷ்டப்படி பானம் செய்யும்படி அனுமதி கொடுக்கப்படவில்லை அதுபோலவே யாகத்தில் தேவதையை உத்தேசித்துப் பசுவைக் கொல்வதற்கு வேதம் அனுமதித்ததே யொழிய, தான் புசிப்பதற்காகப் பசுவைக் கொல்லும்படி வேதத்தில் சொல்லப்படவில்லை அதுபோலவே புத்திரனை உண்டுபண்ணுவதற்காக ஸ்திரீகளிடத்தில் சங்கமம் செய்யலாமென்று சொல்லப்பட்டதே யொழிய, தனதிஷ்டப்படி ரதிக்காக ஸ்திரீ சங்கமம் விதிக்கப்படவில்லை. மூடர்கள் மேற்சொல்லியதை மிக்க சுத்தமான தர்மமென்று அறியார்கள். எவர்கள் மேற்சொல்லிய தர்மத்தை அறியாமல் கர்வங்கொண்டு தங்களைச் சாதுக்களென்று நினைத்துக்கொண்டு பசுக்களைக்

கொன்று தங்களுடைய சரீரத்தைப் போஷிக்கிறார்களோ அவர்கள் மரணமடைந்த பிறகு பரலோகத்தில் அந்தப் பசுக்கள் அவர்களைப் புசிக்கும். பின்னும் எவர்கள் பிறருடைய சரீரத்திலிருக்கும் தம்முடைய ஆத்மாவாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் துவேஷிக்கிறார்களோ, புத்திரன் முதலியவர்களிடத்திலும் தங்கள் சரீரத்திலும் அபிமானம் வைக்கிறார்களோ, அவர்கள் நரகத்தையடைகிறார்கள். எவர்கள் தர்மம், அர்த்தம், காமம் இவைகளையே பிரதானமாகக்கொண்டு, சரீரம் முதலியவைகளைச் சாசுவதமென்று நினைத்து, தத்துவஞானத்தை அடையாமல் மூடர்களாக இருக்கிறார்களோ அவர்கள் தாமே தம்முடைய ஆத்மாவைக் கொல்லுகிறார்கள். (மூடர்கள் சாதுக்களால் அனுக்கிரகிக்கப்பட்டு நல்ல கதியை அடைவார்கள். விவேகிகள் தாமாகவே சம்ஸாரத்தைத் தாண்டுவார்கள். மிக்க மூடர்களல்லாமலும், விவேகிகளாக இல்லாமலும், மத்திய ஸ்திதியில் இருப்பவர்கள் நரகத்தை அடைகிறார்கள் என்று தாத்பரியம். எவர்கள் ஆத்மாவின் உண்மையான சுரூபத்தை அறியாமல் ஆத்மாவை வேறாகச் சொல்லுகிறார்களோ அவர்கள் ஆத்மகாதிகள் எனப்படுகிறார்கள். அவர்கள் விஷயங்களில் நிவிருத்தியை அடையாதவர்கள்; கர்மத்தையே ஞானமென்று நினைத்தவர்கள்; அவர்களுடைய மனோரதமானது காலத்தால் கெடுக்கப்படுமாகையால் அவர்கள் துக்கத்தை அடைவார்கள். மேலும் அவர்கள் ஸ்ரீ வாசுதேவனை உபாசியாமல் இருந்ததால் வீடு, புத்திரன், மித்திரன், பணம் முதலியவைகளை விட்டு நரகத்தை அடைகிறார்கள்'' என்று சொன்னார்.

18—42. அதனைக் கேட்ட நிமி என்ற அரசன் அந்த யோகிகளைப் பார்த்து, "அந்தப் பகவான் எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த வர்ணமுள்ளவர்? எவ்வித சுரூப

முள்ளவர்? மனிதர்கள் எந்த நாமத்தைச் சொல்லி, எந்த விதிப்படி பகவானைப் பூஜிக்கவேண்டும்? அதனைச் சொல்லும்" என்று கேட்டார். அதனைக் கேட்ட கரபாஜனர் என்பவர் அரசனை நோக்கி, "கிருதம், திரேதா, துவாபரம், கலி என்ற நான்கு யுகங்களிலும் பகவான் பல வகையான நிறம், பெயர், சுருபம் இவைகளுள்ளவராக இருப்பதால் அவரை மனிதர்கள் பல முறையாகப் பூஜிக்கிறார்கள். கிருத யுகத்தில் பகவான் வெண்மை நிறத்துடனும், நான்கு கைகளுடனும், ஜடை, மரப்பட்டை இவைகளைத் தரித்தவராகி மான்தோல், யக்ஞோபவீதம், ஜபமாலை, தண்டம், கமண்டலு இவைகளைத் தரித்து பிரம்மசாரி வேஷத்துடனிருக்கிறார். அந்தக் காலத்திய மனிதர்கள் ஒருவருக்கொருவர் விரோதமற்றுச் சாந்தர்களாகியும், சகல பிராணிகளிடத்திலும் சமபுத்தி உள்ளவர்களாகவும் இருந்து சமம், தமம் இவைகளுள்ள தியானயோகத்தைச் செய்து பகவானை ஆராதித்தார்கள். அப்பொழுது பகவான் தர்மங்களை நிர்வகிப்பதால் தர்மரென்றும், யோகங்களுக்கு அதிபதியாகையால் யோகேச்சுவரர் என்றும், வைகுண்டரென்றும், ஹம்சரென்றும், ஈசுவரரென்றும், பிரத்யக்ஷம் முதலிய பிரமாணங்களுக்குப் புலப்படாததால் அவ்யக்தரென்றும், பரமாத்மா என்றும் பலவகையான குணங்களுள்ளவராகவும் திவ்விய நாமங்களுள்ளவராகவும் சொல்லப்படுகிறார். திரேதாயுகத்தில் பகவான் சிவந்த நிறமுள்ளவராகவும், நான்கு கைகளுள்ளவராகவும், மூன்று மேகலைகள் உள்ளவராகவும், பொன்னிறமான தலைமயிர்கள் உள்ளவராகவும், தேவ சுருபியும், சுருக் சுருவம் இவைகளை அடையாளமாகக்கொண்டு இருக்கிறார். அந்தக் காலத்தில் மனிதர்கள் தர்மத்தில் நோக்குமுள்ளவர்களாகவும், பிரம்மவித்துக்களாகவும் இருந்தார்கள். அவர்கள் வேதத்

நிற் சொல்லிய கர்மங்களை அனுஷ்டித்து, சகல தேவ சுரூபியான ஸ்ரீமந் நாராயணனைப் பூஜிக்கிறார்கள். அப்போது பகவான் விஷ்ணு, யக்ஞர், பிரச்னி கர்ப்பர், சர்வ தேவர் உருக்கிரமர், விருஷாகபி, ஜயந்தர், உருகாயர் என்று சொல்லப்படுகிறார். துவாபர யுகத்தில் பகவான் காயாம்பூப்போன்ற நிறமுள்ளவராகவும் பீதாம்பரத்தைத் தரித்தவராகவும், சக்கரம் முதலிய ஆயுதங்கள் உள்ளவராகவும், ஸ்ரீவத்ஸம் முதலிய அடையாளங்கள் உள்ளவராகவும் இருக்கிறார். அப்பொழுது மனிதர்கள் பரமாத்மாவை அறியவேண்டுமென்ற விருப்பமுள்ளவராகி, குடை, சாமரம் முதலிய உபசாரங்களுடன் வேதத்தில் சொல்லிய முறைப்படியும் ஆகம முறைப்படியும் பகவானைப் பூஜிக்கிறார்கள். மேலும், அந்தக் காலத்தில் மனிதர்கள், "வாசுதேவராகிய பகவானுக்கு நமஸ்காரம். சங்கர்ஷண மூர்த்திக்கு நமஸ்காரம். பிரத்யும்ன சுரூபியும், அனிருத்த சுரூபியும் பகவானுமாகிய உம்மை எப்பொழுதும் நமஸ்கரிக்கிறோம். நாராயண மகரிஷியாகிய உமக்கு நமஸ்காரம். மகா புருஷராகிய உமக்கு நமஸ்காரம் உலகத்திற்கு அதிபதியும் ஜகத் சுரூபியும், சகல பிராணிகளுக்கும் ஆத்மாவுமாகிய உமக்கு நமஸ்காரம்" என்று ஸ்தோத்திரம் செய்கிறார்கள். கலியுகத்தில் பலவகையான ஆகம விதிப்படி ஜனங்கள் பகவானைப் பூஜிப்பதைச் சொல்லுகிறேன்; கேளும். (கலியில் ஆகம விதியே முக்கியமென்று கருத்து.) கலியுகத்தில் பகவான் இந்திரநீலம்போன்ற நிறமுள்ளவராக இருக்கிறார். புத்திசாலிகளாகிய ஜனங்கள் சங்கம், சக்கரம், கௌஸ்துபம், பார்ஷதர்கள் இவர்களுடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைப் பகவானுடைய திவ்விய நாமங்களையே பெரும்பாலும் உச்சரித்துப் பூசிக்கிறார்கள். மேலும், அவர்கள் "ஓ புருஷோத்தம! உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்

கிறேன். அது எப்பொழுதும் தியானம் பண்ணக்கூடியது; களத்திரம், புத்திரன் முதலியவர்களால் ஏற்படும் அவமானத்தை நிவர்த்திக்கக்கூடியது; இஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது; கங்கை முதலிய தீர்த்தங்களுக்கு இருப்பிடமானதால் மிக்க பரிசுத்தியைக் கொடுக்கக் கூடியது; பரமசிவன் பிரம்மதேவர் இவர்களால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டது; சரணமடையக்கூடியது; அண்டினவர்களுடைய உபத்திரவத்தை நிவர்த்திக்கும் சுபாவம் உள்ளது; சம்ஸாரமாகிய சமுத்திரத்தைத் தாண்டுவிக்கும் ஓடமாக இருப்பது. "ஓ மகா புருஷ! நீர் ஸ்ரீ ராமனாக அவதரித்துப் பிதாவினுடைய வார்த்தையைப் பரிபாலிப்பதாகிய தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக விட முடியாததும், தேவர்களாலும் விரும்பக் கூடியதுமான ராஜ்யத்தில் ஆசையை ஒழித்துக் காட்டிற்குச் சென்றீர். அவ்விடத்தில் சுவர்ணமயமான மானைப் பார்த்து அதனிடத்தில் சீதை ஆசைப்பட, அதனைப் பிடிப்பதற்காக அதன்பின் சென்றீர். அப்படிப்பட்ட உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறேன்" என்று ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். இப்படி ஒவ்வொரு யுகத்திலும் மனிதர்கள் அந்த யுகத்திற்குத் தக்கபடி சகல க்ஷேமங்களுக்கும் அதிபதியான பகவானைப் பூஜிக்கிறார்கள். மேலும், கலியுகத்தில் அநேக தோஷங்கள் இருந்தாலும் அதன் குணத்தை அறிந்த பெரியோர்கள் கலியுகமே மேலானது என்று சிலாகிக்கிறார்கள். ஏனெனில் கலியுகத்தில் பகவானுடைய திவ்விய நாமங்களைச் சொல்வதனாலேயே சகல புருஷார்த்தங்களும் கிடைக்கின்றன. சம்ஸாரிகளான பிராணிகளுக்குப் பகவானுடைய திவ்ய நாமங்களை உச்சரிப்பதால் சம்ஸார துக்கம் நிவர்த்தியாகி, சாந்தி உண்டாகிறது. ஆனதால் இதனைவிட மேலான லாபம் வேறொன்றுமில்லை. கிருதம் முதலிய யுகங்களில்

உள்ள மனிதர்கள் கலியுகத்தில் தாங்கள் ஜனிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். (கிருதயுகத்தில் தியானஞ் செய்தும், திரேதாயுகத்தில் யாகஙகளைச் செய்தும், துவாபர யுகத்தில் விதிப்படி பூஜிப்பதாலும் எதனை அடைகிறானோ, அந்தப் பயனை கலியுகத்தில் பகவானுடைய திவ்விய நாமங்களை உச்சரிப்பதாலேயே அடைகிறான்) கலியுகத்தில் சில இடங்களில் ஜனங்கள் ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பக்தியுள்ளவர்களாக இருப்பார்கள். ஓ மகாராஜ! திராவிட தேசத்தில் ஜனங்கள் பெரும்பாலும் விஷ்ணுபக்தர்களாக இருப்பார்கள். எந்தத் தேசத்தில் தாம்பிரபரணி, கிருதமாலா, பயஸ்வினி, மிக்க புண்ணிய நதியாய காவிரி, மகா நதியாகிய பிரதீசி ஆகிய இந்த நதிகள் ஓடுகின்றனவோ, அவைகளின் தீர்த்தத்தை எவர்கள் பானம் செய்கிறார்களோ அந்த மனிதர்கள் சுத்த சித்தர்களாகி, பெரும்பாலும் பகவானிடத்தில் பக்தி உள்ளவர்களாக இருப்பார்கள். எவன் எல்லா ஜகத்தும் ஸ்ரீமந் நாராயண சுரூபமென்று நினைத்து மூன்று கரணங்களாலும் பகவானைச் சரணமடைகிறானோ, அவன் தேவர்கள், ரிஷிகள், பூதங்கள், பிதிருக்கள், மற்ற பந்துக்கள் ஆகிய இவர்களுக்கு வேலைக்காரனாகவாவது, கடனுள்ளவனாகவாவது ஆகமாட்டான். பரமாத்மாவாகிய பகவான், எவன் தேகம் முதலியவைகளில் அபிமானத்தையொழித்து, தம்முடைய பாதத்தைச் சரணமடைகிறானோ அவனுடைய இருதயத்தில் தாம் இருந்து, அவனுக்குத் தவறுதலால் நேரும் பாபங்களையும் நிவர்த்திக்கிறார்" என்று சொன்னார்.

43--50. அதனைக்கேட்ட நிமி என்ற அரசன் உபாத்தியாயரை முன்னிட்டு அந்த யோகிகளைப் பூஜித்தார். பின்பு சகல ஜனங்களும் பார்த்துக்கொண்டிருக்க அந்த யோகிகள் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தார்கள்.

அரசன் பாகவத தர்மங்களை அனுஷ்டித்து உத்தமமான கதியை அடைந்தார். ஆனதால் ஓ வசுதேவரே! நீரும் விஷயங்களில் ஆசையை ஒழித்து மிக்க சிரத்தையுடன் பாகவத தர்மங்களை அனுஷ்டித்து உத்தம கதியை அடைவீர். உங்கள் இருவருக்கும் மகா விஷ்ணு புத்திரனாக அவதரித்திருப்பதால் உங்களுடைய கீர்த்தி உலகத்தில் பரவியது. மேலும், நீங்கள் ஸ்ரீ கிருஷ்ணனைப் புத்திரனென்று நினைத்து மிக்க சந்தோஷத்துடன் பார்ப்பது, ஆலிங்கனஞ் செய்துகொள்வது, பேசுவது, படுப்பது, உட்காருவது, சேர்ந்து போஜனம் செய்வது ஆகிய இவைகளை அனுஷ்டித்ததால் உங்களுடைய ஆத்மா சுத்தமாயிற்று. சிசுபாலன், பௌண்டரன், சால்வன் முதலியவர்கள் சயனம், ஆசனம், நடை, பார்ப்பது முதலியவைகளில் ஸ்ரீ கிருஷ்ணனை விரோத புத்தியால் தியானித்தும் அவருடைய சாரூப்பியத்தை அடைந்தார்கள். அவரிடத்தில் சிநேகம் உள்ளவர்களுக்கு உத்தம கதி கிடைப்பதில் என்ன சந்தேகம்? ஸ்ரீ கிருஷ்ணனை சகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும் அதிபதியாகவுமிருக்கிறார். அவர் மாயையால் மனிதவேடம் தரித்து தம்முடைய மகிமையை மறைத்துக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட பரமபுருஷனைப் புத்திரனென்று நினைக்கவேண்டாம். மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் பூமிக்குச் சுமையாயிருக்கும் துஷ்டர்களான அரசர்களைக் கொன்று சாதுக்களைக் காப்பாற்றுவதற்காகப் பூமியில் அவதரித்திருக்கிறார். பின்னும் அவருடைய கீர்த்தியானது சகல ஜனங்களுக்கும் மோட்சத்தைக் கொடுப்பதற்காகப் பரவி இருக்கிறது" என்று நாரதர் சொன்னார்.

51—52. அதனைக் கேட்டு மிக்க பாக்கியமுள்ள வசுதேவரும் தேவகியும் மிகவும் ஆச்சரியமடைந்து மோகத்தைவிட்டு ஞானத்தை அடைந்தார்கள். இந்தப் புண்யமான இதிகாசத்தை எவனை சிரத்தையுடன் மனத்தில் சிந்திக்கிறானோ, அவன் இந்தஜன்மத்திலேயே மோகத்தைவிட்டு பிரம்ம சுரூபத்தை அடைவான்.

---

# அத்தியாயம் 6

## தேவர்கள் கிருஷ்ணனை வைகுண்டத்திற்கு அழைத்தது

1—6. பின்பு பிரம்மதேவர், சனகர் முதலியவர்கள், பிரஜாபதிகள், சகல பிரஜைகளுக்கும் அதிபதியான பரமசிவன், அவருடைய கணங்கள், இந்திரன், மருத்துக்கள், ஆதித்தியர்கள், வசுக்கள், அசுவினீ தேவர்கள், ரிபுக்கள், அங்கிரசுகள், ருத்திரர்கள், விசுவேதேவர்கள், சாத்தியர்கள், கந்தர்வர்கள், அப்சரசுக்கள், நாகர்கள், சித்தர்கள், சாரணர்கள், குஹ்யகர்கள், ரிஷிகள், பிதிருக்கள், வித்தியாதரர்கள், கின்னரர்கள் ஆகிய எல்லோரும் கிருஷ்ணனைத் தரிசிக்கவேண்டுமென்று விருப்பத்துடன் துவாரகா நகரஞ் சென்றார்கள். மேற்காட்டிய தேவர்கள் அடிக்கடி ஸ்ரீமந் நாராயணனைத் தரிசித்தவர்களானாலும் பகவான் கிருஷ்ணனாக அவதரித்து ஜனங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுத்து சகல ஜனங்களுடைய பாபத்தை நிவர்த்திக்கும் தமதுடைய கீர்த்தியைப் பரவச் செய்துகொண்டும் இருப்பதால் அந்த சுரூபத்தைத் தரிசிக்க விரும்பி, சகல சம்பத்துக்களால் நிறைந்த துவாரகாநகரம் வந்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய சுரூபம் மிகவும் அற்புதமானதால் அதனைப் பார்த்தும் தேவர்களுக்குப் போதுமென்ற திருப்தி உண்டாகவில்லை. மேலும் இந்தத் தேவர்கள் தேவலோகத்தில் உண்டான புஷ்பமாலைகளால் பகவானைப் பூஜித்து (கிருஷ்ணனுடைய சரீரம் மறையும்படி புஷ்பங்களைச் சாத்தி) விசித்திரமான பதங்கள் அர்த்தங்கள் இவைகளுள்ள சுலோகங்களைச் சொல்லி ஜகதீசனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பின்வருமாறு தோத்திரம் செய்தார்கள்.

7—19. "ஓ நாத! கர்மமாகிற பாசத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொள்வதற்காக ஜனங்கள் உம்மிடத்திலே மனத்தைச் செலுத்தி உம்முடைய பாதாரவிந்தத்தை இருதயத்தில் தியானிக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதத்தைப் புத்தி, இந்திரியம், பிராணன், மனது, வாக்கு இவைகளுடன் நாங்கள் நமஸ்கரிக்கிறோம். (கைகள், கால்கள், முழங்கால், மார்பு தலை, கண்கள், மனது, வாக்கு இவைகளால் நமஸ்கரிப்பதே அஷ்டாங்க நமஸ்காரம் என்று சொல்லப்படுகிறது. யோகிகள் பகவானை இருதயத்தில் மாத்திரம் பார்க்கிறார்கள்; நாங்கள் நேரில் பார்க்கிறோம். அதனால் எங்களுடைய பாக்கியம் அதிகமென்று கருத்து) ஒன்றாலும் ஜயிக்கப்படாதவரே! நீர் ஆவரணமற்ற ஆத்ம சுகத்தில் ரமித்துக்கொண்டிருப்பவர். ஆசை முதலியவைகள் உமக்கு இல்லை. நீர் மாயையின் குணங்களுக்கு அதிபதியாக இருப்பவர்; ஆனதால் முக்குண சுரூபமான மாயையைக்கொண்டு இந்தப் பிரபஞ்சத்தைத் தம்மிடத்தில் சிருஷ்டித்து சம்ரட்சித்து, சங்கரிக்கிறீர். அப்படிப்பட்ட பிரபஞ்சம் மனத்தாலும் நினைக்க முடியாததாக இருக்கிறது. நீர் மாயைக்கு அதிபதியானதால் உமக்குக் கர்மபந்தம் இல்லை. (நீர் கர்மங்களைச் செய்துகொண்டிருந்தாலும் ஆத்மாராமரானமையால் முமுட்சுக்கள் உம்மைத் தியானிக்கிறார்கள் என்று கருத்து). எல்லாராலும் துதிக்கக்கூடியவரே! உம்முடைய சரிதங்களைச் சிரத்தையுடன் கேட்பதாலும், உம்முடைய மூர்த்தியைத் தியானிப்பதாலும் ஜனங்கள் சுத்தர்களாவது போல உபாசனை, சாஸ்திரம், அத்தியயனம், தானம், தவம் யாகம் முதலியவைகளைச் செய்வதால் அப்படிச் சுத்தர்களாக ஆகிறதில்லை. (எல்லோரையும் பரிசுத்தப்படுத்துவதற்காகவே கர்மங்களைச் செய்து, கீர்த்தியை உலகத்தில் பரவச் செய்கிறீர் என்று கருத்து.)

ஓ பகவன்! உம்முடைய பாதத்தை மகரிஷிகள் மோட்சத்தை அடைய விரும்பி மிக்க பிரேமையுடன் இருதயத்தில் தியானிக்கிறார்கள். பக்தர்கள் உமக்குச் சமானமான ஐசுவரியத்தை அடைய விரும்பி, வாசுதேவர் முதலிய வியூகோபாசனையில் பூஜிக்கிறார்கள். அவர்களிலும் ஆத்மாவின் உண்மையை அறிந்த சிலர் சுவர்க்கத்தைத் தாண்டி வைகுண்டத்தை அடைவதற்காக மூன்று காலங்களில் பூஜிக்கிறார்கள். அப்படிப்பட்ட உம்முடைய பாதமானது எங்களுடைய விஷய வாசனைகளை நாசஞ் செய்யட்டும். ஓ ஈச! பிராம்மணர்கள் ஆகவனீயம் முதலிய யாகாக்னியில் ஹோமம் செய்வதற்காக ஹவிஸை இரு கைகளால் எடுத்துக்கொண்டு வேதத்தில் சொல்லியபடி இந்திரன் முதலிய சுரூபமாக எதனைத் தியானிக்கிறார்களோ, (எந்தத் தேவதையை உத்தேசித்து ஹவிஸ்ஸை எடுத்துக்கொள்ளுகிறார்களோ, அந்த தேவதையைத் தியானஞ்செய்து பின்பு வஷட் என்று சொல்லவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.) யோகிகள் உம்முடைய மாயை (அணிமா முதலியவை) அறிய விரும்பி ஆத்ம யோகத்தில் எதனைத் தியானிக்கிறார்களோ, பாகவதர்கள் (முக்தர்கள்) எதனைச் சேவிக்கிறார்களோ, அந்த உம்முடைய பாதமானது எங்களுடைய விஷய வாசனைகளை நாசஞ் செய்யட்டும். நீர் பக்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வனமாலையைத் தரிக்கிறீர். உம்முடைய மார்பில் வசிக்கும் லக்ஷ்மிதேவி சபத்தினிபோல் அந்த வனமாலையினிடத்தில் விரோத புத்தி வைக்கிறாள். ஆனாலும் நீர் அந்த லட்சுமியை லட்சியஞ் செய்யாமல் பக்தர்களால் சமர்ப்பிக்கப்பட்டதென்ற காரணத்தால் அந்த மாலையைத் தரித்து அதனால் பூஜிக்கப்பட்டவராக ஆகிறீர். அப்படிப்பட்ட உம்முடைய பாதம் எங்களுடைய விஷய வாசனைகளை நாசஞ் செய்யட்டும். ஓ பகவன்! உம்மு

டைய பாதமானது சரணமடைகிற எங்களுடைய பாபத்தைத் நிவர்த்திக்கட்டும். அது பலிச் சக்கரவர்த்தியை நிக்கிரகித்தபொழுது உலகங்களை மூன்று அடிகளாக அளந்தது; இரண்டாவது அடியில் சத்தியலோகஞ்சென்றதால் விஜயத்வஜம்போல உயரமாக இருந்தது; மூன்று வகையாகப் பிரவகித்த கங்காநதியுள்ளது; அசுர சைன்னியத்திற்குப் பயத்தையும், தேவ சைன்னியத்திற்குச் சந்தோஷத்தையும் உண்டுபண்ணியது; தேவர்களுக்கு சுவர்க்கத்தைக் கொடுத்தது. அசுரர்களை நிக்ரகித்தது; ஓ பகவன்! நீர் பிரகிருதி, புருஷன் ஆகிய இவர்களுக்கும் மேலானவர்; புருஷோத்தமர்; கால சுரூபி; அப்படிப்பட்ட உமக்குப் பிரம்மா முதலிய சகல பிராணிகளும் மூக்கணையக் கயிற்றால் அடக்கப்படும் எருதுகள் போல வசமானவர்களேயாம். அந்தப் பிரம்மதேவர் முதலியவர்கள் ஒருவர்க்கொருவர் (ராகத்துவேஷத்தால்) யுத்தஞ் செய்தாலும், அவர்கள் ஜயிப்பதும் அபஜயத்தை அடைவதும் உம்முடைய அதீனமேயாம். அப்படிப்பட்ட உம்முடைய பாதம் எங்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கட்டும். மேலும், உலகத்தைப் படைப்பது, ரட்சிப்பது, சங்கரிப்பது ஆகிய இவைகளுக்குக் காரணராக இருக்கிறீர். பிரகிருதி, ஜீவன், மகத் தத்துவம் ஆகிய இவைகளுக்கு நியந்தாவாகிய காலமென்று உம்மைப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அந்தக் காலமோ சம்வத்சர சுரூபமானது; மூன்று நாபியுள்ளது (மூன்று சாதுர்மாஸ்யங்கள்); எல்லாவற்றையும் சங்கரிப்பதில் பிரவிருத்தித்தது; மிக்க வேகமுள்ளது; அந்த சுரூபியுமாக இருப்பதால் நீர் புருஷோத்தமர். புருஷன் உம்மிடமிருந்து சக்தியை அடைந்து மாயா சம்பந்தத்தால் உலகத்தின் கர்ப்பம்போன்ற மகத் தத்துவத்தைத் தரித்தான். அந்த மகத்து மாயா சம்பந்தத்தால் ஆவரணங்களுள்ளதும்,

சுவர்ணம் போலப் பிரகாசிப்பதுமான அண்ட கோசத்தை உண்டுபண்ணிற்று. ஆனதால் தாவரம், ஜங்கமம் ஆகிய எல்லாவற்றிற்கும் நீர் அதிபதி; ஓ இந்திரியங்களுக்கு அதிபதியே! மாயையின் குணத்தால் விருத்தியடைந்த (இந்திரியங்களால் கொண்டுவரப்பட்ட) சப்தம் முதலிய விஷயங்களை அநுபவித்தாலும் அவைகளில் நீர் சம்பந்தப்படுகிறதில்லை. உம்மைத் தவிர மற்றவர்கள் (யோகிகள்) உண்மையில் இல்லாதவைகளாகும் சப்தம் முதலிய விஷயங்களைக்கண்டு பயப்படுகிறார்கள். மன்மதனுடைய பாணங்கள் போன்ற பதினாறு ஆயிரம் ஸ்திரீகள் புன்சிரிப்புள்ள பார்வையால் தங்களுடைய அபிப்பிராயத்தைக் காண்பித்து, அதனால் அழகிய புருவங்களால் மன்மத தாபத்தை உண்டுபண்ணக்கூடியவர்களாக இருந்தும் உம்மை மோகிக்கச்செய்ய சக்தியற்றவர்களாக ஆனார்கள். ஆனதால் நீர் விஷயங்களால் ஜயிக்கப்படாதவர். அவரவர்களுக்குரிய ஆச்சிரம தருமங்களை அநுஷ்டித்துக்கொண்டிருக்கும் ஜனங்கள் வேதங்களால் வர்ணிக்கப்படும் உம்முடைய கீர்த்தியைக் காதுகளாலும், உம்முடைய பாதத்திலுண்டாகிய கங்கா தீர்த்தத்தைச் சரீரத்தாலும் சேவிக்கிறார்கள். ஆனதால் உம்முடைய கதாம்ருதமாகிய ஜலமுள்ள நதிகளும் (கீர்த்தி) உம்முடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையும் மூவுலகத்தின் பாபத்தைப் போக்கடிக்கின்றன" என்று தோத்திரம் செய்தார்கள்.

20—27. இம்மாதிரி பிரம்மதேவர் தேவர்களுடன் பகவானைத் தோத்திரஞ் செய்து ஆகாயத்திலிருந்துகொண்டு கோவிந்தரை நோக்கி, "ஓ சகல உலக சுரூபியாக இருக்கும் பிரபுவே! பூமியின் சுமையை நிவர்த்திக்கவேண்டும் என்று முந்தி நான் உம்மிடத்தில் தெரி

விதித்துக்கொண்டேன். அதனை நீர் அங்கீகரித்து அப்படியே செய்தீர். சத்திய பிரதிக்ஞர்களான சாதுக்களிடத்தில் தர்மத்தை ஸ்தாபித்தீர். சகல ஜகத்தின் பாபத்தை நிவர்த்திக்கும் சுத்தமான கீர்த்தியை எல்லா திக்குகளிலும் பரவச் செய்தீர். மேலும் நீர் அற்புதமான ரூபத்துடன் யது வம்சத்தில் அவதரித்து அற்புதமான செய்கைகளை உலகத்தின் க்ஷேமத்திற்காகச் செய்தீர். ஓ ஈச! அந்தச் சரித்திரங்களைக் கலியுகத்தில் சாதுக்கள் வாயினால் உச்சரித்தும் பிறர் சொல்லக் கேட்டும் சுத்தர்களாவார்கள். ஓ புருஷோத்தம! நீர் யது வம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கும் பிரபுவே! தேவர்களுடைய காரியத்தில் இப்பொழுது ஒன்றும் பாக்கியில்லை. பிராமண சாபத்தால் இந்த யது வம்சமானது பெரும்பாலும் நாசமடைந்தது. ஓ வைகுண்ட! உமக்கு இஷ்டமிருக்குமானால் உம்முடைய ஸ்தானத்தை அடைந்து சேவகர்களான எங்களைக் காப்பாற்றும்' என்று பிரார்த்தித்தார்.

28—29. மாயையால் மனித வடிவம் கொண்டவரான பகவான் பிரம்மா முதலிய தேவர்களால் இம்மாதிரி துதிக்கப்பெற்று, பிரம்ம தேவரை நோக்கி "ஓ பிரம்ம தேவரே! நீர் சொல்வது யாவும் ஏற்கனவே என்னால் ஆலோசிக்கப்பட்டவைதான். தேவர்களாகிய உங்களுடைய எல்லாக் காரியங்களும் செய்யப்பட்டன. பூமியின் சுமை நிவர்த்திக்கப்பட்டது. ஆனாலும், இந்த யது வம்சமானது பராக்கிரமத்தாலும், ஐசுவரியத்தாலும் கர்வங்கொண்டு மரியாதை தவறி, கரைபுரண்ட சமுத்திரம் போல் உலகத்தை உபத்திரவிக்கும்போல் இருக்கிறது; இந்த கர்வங்கொண்டவர்களான யாதவர்களுடைய குலத்தை நான் நாசஞ் செய்யாமல் வைகுண்டஞ் சென்றால் யாதவர்களால் இந்த உலகம் நாசம் பண்ணப்படும்.

பிராம்மண சாபத்தால் இந்தக் குலத்திற்கு நாசமும் ஆரம்பித்திருக்கிறது. இதனை நாசம் செய்த பின் வைகுண்டம் வருகிறேன்" என்றார். உலகநாதனாகிய இந்தப் பகவானுடைய வார்த்தையைக் கேட்டுப் பிரம்மதேவர் அவரை நமஸ்கரித்து, தேவர்களுடன் தமது உலகம் சென்றார்.

34–40. பின்பு துவாரகா நகரத்தில் மிக்க உத்பாதங்கள் (அபசகுனங்கள்) காணப்பட்டன. அவைகளைப் பார்த்து யாதவர்களுக்குள் வயது முதிர்ந்தவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனிடம் சென்றார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களை நோக்கி, "ஓ பெரியோர்களே! நம்முடைய நகரத்தில் எங்கும் உத்பாதங்கள் காணப்படுகின்றன. மேலும் நம்முடைய குலத்திற்குப் பிராம்மண சாபம் நேரிட்டிருக்கிறது. அது நிவர்த்திக்க முடியாதது; நமக்குப் பிழைத்திருக்கவேண்டும் என்ற விருப்பம் இருக்குமானால் இவ்விடத்தில் வசிக்கக்கூடாது; மிக்க புண்ணியகரமான பிரபாஸ தீர்த்தத்திற்கு இன்றைக்கே போவோம், தாமதிக்க வேண்டாம். முன்னொருகால் சந்திரன் தட்சருடைய சாபத்தால் ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தை அடைந்து, அதனை நிவர்த்தித்துக்கொள்வதற்காகப் பிரபாஸ தீர்த்தம் சென்று அதில் ஸ்நானஞ் செய்தார். அதனால் அவருக்கு அந்த வியாதி நிவர்த்தியானதுமன்றி, கலைகளும் விருத்தியாயின. நாமும் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிதிருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம் செய்து பிராம்மணர்களுக்குப் பலவகையான ருசியான அன்னங்களைக் கொடுத்தும் உத்தம பாத்திரங்களில் சிரத்தையுடன் தானங்களைச் செய்வோம். கப்பலால் சமுத்திரத்தைத் தாண்டுவது போல வருகிற ஆபத்தை மேற்காட்டிய தர்மத்தால் நிவர்த்தித்துக்கொள்வோம்" என்று சொன்னார். அதனைக் கேட்ட யாதவர்கள் பிரபாஸ தீர்த்தம் செல்லுகிறது என்ற நிச்சயத்துடன் வண்டிகளைப் பூட்டினார்கள்.

41—51. அதனைக் கண்ட உத்தவர் பகவானுடைய வார்த்தையைக் கேட்டும் கோரமான உத்பாதங்களைப் பார்த்தும் ரகசியத்தில் கிருஷ்ணனுடைய சமீபம் சென்று உலகத்திற்கு அதிபதிகளாகிய பிரமமா முதலியவர்களுக்கும் அதிபதியாகிய பகவானுடைய பாதங்களில் நமஸ்கரித்து, "ஓ தேவ! தேவர்களுக்கும் அதிபதியே! யோகிகளுக்கு அதிபதியே! நாமங்களைக் கேட்பதாலும், உச்சரிப்பதாலும் புண்ணியத்தைக் கொடுப்பவரே! நீர் பிராமண சாபத்தை நிவர்த்திக்கும் சாமர்த்தியமுள்ளவரானாலும் அப்படிச் செய்யாமலிருப்பதால் இந்த யது குலத்தை நாசஞ் செய்து வைகுண்டம் செல்வீரென்பதில் சந்தேகம் இல்லை. ஓ கேசவ! உம்முடைய பாதாரவிந்தத்தை அரைக்கணமேனும் விட்டுப் பிரிந்திருக்க எனக்கு இஷ்டமில்லை. ஆனதால் வைகுண்டத்திற்கு என்னையும் அழைத்துப்போகவேண்டும் உம்முடைய சரிதமானது ஜனங்களுக்கு மிக்க க்ஷேமத்தைக்கொடுக்கக் கூடியது. காதுக்கு அமிருதமாகிய உம்முடைய கதையைப் பானம் பண்ணின ஜனங்கள் மற்ற விஷயங்களில் ஆசைப் படமாட்டார்கள். அப்படியிருக்கப்படுப்பது உட்காருவது, சஞ்சரிப்பது, ஸ்நானஞ் செய்வது, விளையாடுவது, போஜனஞ்செய்வது இவைகளில் உம்முடன்கூட இருந்து உம்மைச் சேவித்த பக்தர்களான நாங்கள் உம்மை எப்படி விட்டுப் பிரிவோம்? உம்மால் அனுபவிக்கப்பட்டு நிர்மால்யமான மாலை, சந்தனம், ஆபரணம் இவைகளைத் தரித்தும், நீர் புசித்து எஞ்சிய அன்னத்தைப் புசித்தும் உம்மைச் சேவிக்கும் நாங்கள் மாயையை ஜயிப்போம. காற்றை ஆகாரமாய்க்கொண்ட மகரிஷிகளும், ஊர்த்வ ரேதசுள்ளவர்களும், சாந்தர்களும் சுத்தர்களுமான சந்நியாசிகள் உம்முடைய பிரம்ம சுரூபத்தை அடைகிறார்கள். ஓ முக்கிய யோகியே! கர்ம மார்க்கத்தில் சுற்றிக்கொண்டிருக்கும்

நாங்கள் உம்முடைய பக்தர்களுடன் உம்முடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டு சம்ஸாரத்தை எளிதில் தாண்டுகிறோம். மேலும் உம்முடைய நடை, சிரிப்புள்ள பார்வை, விளையாட்டு, இவைகளை நினைத்துக்கொண்டும், உம்மால் சொல்லப்பட்ட வார்த்தைகளை உச்சரித்துக்கொண்டும் சம்ஸாரத்தை நிவர்த்தித்துக்கொள்வோம்" என்று கேட்டுக்கொண்டார்.

52. அதனைக் கேட்ட தேவகியின் புத்திரராகிய பகவான் தமக்கு முக்கிய பக்தரும், பிரியரும், வேலைக்காரருமாகிய உத்தவரை நோக்கிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்.

---

# அத்தியாயம் 7

## பகவான் உத்தவருக்கு உபதேசித்தது

1—12. ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரை நோக்கி, "ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! நீர் எதனைச் சொன்னீரோ அது உண்மையே. பிரம்மதேவர், பரமசிவன், லோகபாலகர்கள் ஆகிய எல்லோரும் என்னுடைய வரவை எதிர்பார்த்திருக்கிறார்கள். பிரம்மதேவரால் பிரார்த்திக்கப்பட்டு எதற்காக நான் பூமியில் அவதரித்தேனோ அந்தத் தேவர்களுடைய காரியம் யாவும் முடிந்துவிட்டது. இந்த யாதவ குலமானது பிராம்மண சாபத்தால் எரிக்கப்பட்டிருப்பதால் யாதவர்கள் ஒருவருக்கொருவர் யுத்தம் செய்து நாசமடைவார்கள். இதுமுதல் ஏழாவது நாளில் சமுத்திரம் இந்தப் பட்டணத்தை மூழ்கச்செய்யும். இந்த உலகத்தை என்றைய தினம் நான் விட்டு மேலுலகம் செல்லுகிறேனோ, அன்றைய தினம் முதல் இவ்வுலகம் மங்களமற்றதாகிவிடும்.

ஓ ஸாதுவே! சீக்கிரத்தில் கலி புருஷன் உலகத்தில் வியாபித்துவிடுவான். ஆனதால் நீர் இவ்விடத்தில் வசிக்கவேண்டாம். நான் பூமியைவிட்டுச் சென்றபின் கலியுகத்தில் ஜனங்கள் அதர்மத்தைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். நீர் சரீரத்திலும், பந்துக்களிடத்திலும் ஸ்நேகத்தை யொழித்து என்னிடத்தில் மனதைச் செலுத்தி, சமபுத்தியுள்ளவராகிப் பூமியில் சஞ்சரியும். மனத்தாலும், வாக்கினாலும், கண்களாலும், காதுகளாலும் எது கிரகிக்கப்படுகிறதோ அது மாயாமயமென்றும், நிலையற்றதென்றும் தெரிந்துகொள்ளும். விஷயங்களில் ஆசையுள்ள புருஷனுக்கு உண்டாகும் பேதபுத்தியே பிரமையானது. அதுவே குணத்தையும் தோஷத்தையும் அடைகிறது. இது குணம், இது தோஷம் என்ற பேதபுத்தியுள்ள புருஷனை யுத்தேசித்துக் கர்மம், அகர்மம், விகர்மம் இவைகள் வேதங்களால் விதிக்கப்பட்டனவேயாம். ஆனதால் இந்திரியங்களையும் மனதையும் அடக்கிக்கொண்டு இந்த விஸ்தாரமான ஜகத்தை ஆத்ம சுரூபமான நானாகவும் பார்க்கவேண்டும். வேதங்களின் தாத்பரியத்தைத் தெரிந்துகொள்வது, அவைகளின் அர்த்தத்தை அனுபவிப்பது ஆகிய இவைகளுடன் கூடியவனும், சகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருப்பவனும், இந்த ஆத்மானுபவத்தாலேயே சந்தோஷமடைந்தவனுமான உமக்கு விக்கினங்கள் ஏற்படா. ஞானியாக இருப்பவன் விதி நிஷேதங்களைக் கடந்தவனானாலும் முந்திய அப்பியாசத்தால் கெட்ட காரியங்களைச் செய்யமாட்டான். ஆனால் அதனைச் செய்தால் தோஷம் வரும் என்கிற எண்ணத்தால் செய்கிறதில்லை என்பதில்லை. அதுபோலவே வேதத்திற் சொல்லிய நல்ல கருமங்களை அனுஷ்டிப்பான். ஆனால் இதைச் செய்தால் குணமுண்டு என்கிற எண்ணத்தால் செய்கிற

தில்லை.) அவனுடைய நடை சிறுவனுடைய நடை போன்றதேயாம். (சங்கற்ப விகற்பமற்றது என்று தாத்பரியம்.) இப்படி ஞானம், விஞ்ஞானம் இவைகளுடைய நிரையுள்ளவனாகி, சகல பிராணிகளிடத்திலும் சிநேகத்துடன் சாந்தியுள்ளவனாக ஜகத்தை என்னுடைய சுரூபமென்று நினைப்பவன் திரும்பவும் சம்சாரத்தை அடையமாட்டான்" என்று சொன்னார்.

13–18. அதனைக் கேட்ட மகாபாகவதராகிய உத்தவர் ஆத்மதத்துவத்தை அறிய விரும்பி, பகவானை நமஸ்கரித்து, 'ஓ யோகேச! யோகத்தை அறிந்தவர்களுக்கு நிதியாக இருப்பவரே! யோகத்தால் பிரகாசிக்கும் சுரூபமுள்ளவரே! உலகத்தை உண்டுபண்ணினவரே! எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டுமென்று என்னுடைய க்ஷேமத்திற்காக உபதேசித்தீர். விஷயங்களிலேயே நோக்கமுள்ளவர்களால் எல்லாம் எப்படி விடப்படும்? அதிலும், உம்மிடத்தில் பக்தி செய்யாதவர்களால் விஷயங்களை விடமுடியாது என்று நான் யோசிக்கிறேன். உம்முடைய மாயையால் ஏற்பட்ட தேகத்தில் 'நான்' என்ற அபிமானமும், புத்திரன் முதலியவர்களிடத்தில் 'என்னுடையது' என்ற அபிமானமும் வெகுநாளாக உண்டாகி வேரூன்றியிருக்கிறது. அதனை விட்டுவிடவேண்டுமென்று நீர் உபதேசித்தீரே; (எப்படி சீக்கிரத்தில் அந்த அபிமானத்தை யொழிக்கமுடியும்? ஆனதால் அதன் உபாயத்தைச் சேவகனாகிய எனக்கு உபதேசிக்கவேண்டும்.) பிரம்மா முதலிய சகல பிராணிகளும் உம்முடைய மாயையால் மோகித்து விஷயங்களையே புருஷார்த்தமென்று நினைத்திருக்கிறார்கள். தாமாகப் பிரகாசிப்பதும் சத்தியமுமான உமமுடைய சுரூபத்தைப்பற்றிச் சொல்லுவதற்கு உம்மைவிட வேறொருவராலும் முடியாது. நீர் தோஷமற்றவர்; தேசத்தாலும் காலத்தாலும் அளவிடக்

கூடாதவர்; எல்லாவற்றையும் அறிந்தவர்; ஈசுவரன்; அழிவற்ற வைகுண்டத்தில் வசிப்பவர்; நரநாராயணராக அவதரித்தவர்; அப்படிப்பட்ட உம்மை இந்தச் சரீரத்தில் துக்கங்களால் தபிக்கப்பட்டு நிர்வேதத்தை யடைந்த நான் சரணமடைகிறேன் என்று பிரார்த்தித்தார். (உலகத்தில் சிலர் கெட்ட நடையுள்ளவர்களாக இருப்பார்கள்; சிலர் மற்றவர்களால் சேவிக்கப்பட்டும் பயனைக் கொடுக்கும் காலத்தில் அழிந்துபோவார்கள்; சிலர் மூடர்கள்; சிலர் பிறரைக் காப்பாற்றுவதில் சக்தியில்லாதவர்கள்; சிலர் தம்முடைய ஸ்தானத்தை விட்டு நழுவியவர்கள்; ஆனதால் அவர்களால் என்ன பிரயோசனம்? இம்மாதிரியான குறைகள் உம்மிடத்தில் ஒன்றுமில்லை என்று இந்தச் சுலோகத்தில் காட்டிய ஐந்து விசேஷணங்களால் காட்டப்பட்டது.)

19–31. அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரை நோக்கி, "உலகத்தின் உண்மையைப் பரீக்ஷிப்பவர்களான சில மகரிஷிகள் பெரும்பாலும் ஆத்மாவைத் தாமாகவே விஷய வாசனைகளிலிருந்து நிவர்த்தியடையும்படி செய்கிறார்கள். (பசு முதலிய சரீரங்களிலும்) ஆத்மாவிற்கு ஆத்மாவே குருவாகிறார். மனிதன் விஷயத்தில் சம்சயமே இல்லை. பிரத்தியக்ஷம் அனுமானம் இவைகளைக்கொண்டு புருஷன் க்ஷேமத்தையடைகிறான். மனுஷ்ய ஜன்மத்தில் சாங்கியம், யோகம் இவைகளை அறிந்த விவேகிகள் என்னைச் சகல சக்தியுள்ளவனென்று நன்றாய்த் தெரிந்து கொள்வார்கள். ஒன்று இரண்டு காலுள்ளது, மூன்று கால்களுள்ளது, நான்கு கால்களுள்ளது, அநேக கால்களுள்ளது, கால்களில்லாதது என்ற பலவகையான சரீரங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் புருஷ சரீரமே எனக்குப் பிரியமானது. இந்தப் புருஷ சரீரத்தில் அகங்காரம் முதலியவைகளைக் காட்டிலும் வேறாகவிருக்

கும் என்னை விவேகிகள் காரணங்களைக்கொண்டு அனுமானப் பிரமாணத்தால் தேடுகிறார்கள். ஜடமாகிய புத்தி முதலியவைகளுக்குப் பிரகாசமானது சுவப்பிரகாசனாகிய ஈசுவரனால்தான் உண்டாகவேண்டும். ஆனதால் அவைகளுக்கு சாமர்த்தியத்தைக் கொடுக்கும் ஈசுவரன் ஒருவர் இருக்கிறார் என்ற அனுமானப் பிரமாணத்தால் தெரிந்து கொள்ளுகிறார்கள். (மிக்க தேஜசுள்ள யதுவிற்கும் அவதூதருக்கும் ஏற்பட்ட சம்வாதமாகிய ஒரு இதிகாசத்தை இந்த விஷயத்தில் உதாரணமாகச் சொல்லுகிறேன்.) முன்னொருகால் தர்மங்களை அறிந்தவரான யதுவென்பவர் ஓரிடத்திலும் பயமில்லாமல் சஞ்சரிப்பவரும், விவேகியும், யௌவன வயதுள்ளவரும், அவதூதருமான ஒரு பிராம்மணனைக் கண்டு, " ஓ பிராம்மண! தர்மங்களைச் செய்யாதவராகிய உமக்கு இம்மாதிரியான சூட்சுமபுத்தி எப்படி உண்டாயிற்று? இந்தப் புத்தியை அடைந்த வித்துவானாகிய நீர் சிறுவன்போலச் சஞ்சரிக்கிறீரே. பெரும்பாலும் ஜனங்கள் தீர்க்கமான ஆயுள், கீர்த்தி, ஐசுவரியம் இவைகளை அடைவதற்காக அர்த்தம், காமம இவைகளை விசாரிப்பதுமன்றி ஆத்மவிசாரமும் செய்கிறார்கள். நீர் மிகவும் சமர்த்தர்; வித்வான்; அழகிய சரீரமுள்ளவர்; சொற்பமாகப் பேசுகிறீர் ; ஒன்றையும் செய்கிறதில்லை; ஒன்றையும் விரும்புகிறதில்லை ; எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும் மூடன் போலவும், சாமர்த்தியமுள்ளவரானாலும் பைத்தியங்கொண்டவர்போலவும், அழகுள்ளவரானாலும் பிசாசம் போலவும் சஞ்சரிக்கிறீர். மேலும் சகல ஜனங்களும் காமம், உலோபம் இவைகளாலுண்டாகிய அக்கினியால் எரிக்கப்பட்டுக் கஷ்டப்படுகிறார்கள். நீர் மாத்திரம் கங்காஜலத்தில் மூழ்கிய யானை போலத் தாபத்தை அடையாமல் ஆனந்தத்தை யடைந்திருக்கிறீர். புத்திரன், மித்திரன், களத்திரம் முதலிய

பந்துக்களில்லாதவரும், விஷய போகங்கள் இல்லாதவரு மான உமக்கு இவ்வளவு ஆனந்தம் உண்டாவதற்கு என்ன காரணம்? அதைச் சொல்லவேண்டும்'' என்று கேட்டு அவரைப் பூஜித்து வணக்கத்துடன் அவர் பக்கத்தில் நின்றார்.

32—38. அதனைக் கேட்ட அந்தப் பிராம்மணன் யதுவை நோக்கி, ''ஓ அரசனே! என்னுடைய புத்தியால் அநேகர்களை ஆசாரியர்களாக ஆசிரயித்தேன். அவர்க ளிடமிருந்து சில விஷயங்களைத் தெரிந்துகொண்டு முக்த னுகச் சஞ்சரிக்கிறேன். அவர்களைச் சொல்லுகிறேன், கேளும். (பூமி, வாயு, ஆகாயம், ஜலம், அக்னி, சந்திரன், சூரியன், மாடப்புறு, மலைப்பாம்பு, சமுத்திரம், விளக்கு, விட்டிற்பூச்சி, தேனீ, யானை, வேடன், மான், மத்ஸ்யம், பிங்களாவென்பவள், குரரம் என்ற பறவை, சிறுவன், சிறு பெண், பாணத்தைச் செய்யும் கொல்லன், சர்ப்பம், பட்டுப்பூச்சி, குளவி ஆகிய 24 குருக்களை நான் ஆசிர யித்தேன்.) இவைகளுடைய சுபாவத்திலிருந்து எவை களைக் கிரகித்துக்கொள்ளலாமோ அவைகளை அப்பியசித் துக்கொண்டேன். ஓ யயாதியின் புத்திரராகிய யதுவே! எதனிடமிருந்து, எதை, எப்படிக் கற்றுக்கொண்டேனே அதனைச் சொல்லுகிறேன், தெரிந்துகொள்ளும். பூமி யானது சகல பிராணிகளால் மிதிப்பது முதலியவைகளைச் செய்து உபத்திரவிக்கப்பட்டாலும் அந்த இம்சையை எப்படி சகிக்கிறதோ, அப்படி பிராணிகளால் புருஷன் உபத்திரவிக்கப்பட்டாலும் ''அவர்கள் தெய்வத்தால் தூண்டப்பட்டு நம்மை உபத்திரவிக்கிறார்களே யொழி யத் தாமாக உபத்திரவிக்கவில்லை'' என்று நினைத்து, தம்முடைய தர்மத்திலிருந்து ஒருபொழுதும் தவறக்கூடா தென்று தெரிந்துகொண்டேன். மேலும், மலையானது எப்படி பிறருடைய உபயோகத்திற்காகவே உண்டா

கிறதோ, கொடி, மலையருவி முதலியவைகளைப் பிறருக்கே எப்படி உபயோகப்படுத்துகிறதோ, மரங்கள் பழம், இலை, நிழல், இளை கட்டை முதலியவைகளால் பிறருக்கே எப்படி உபயோகப்படுகிறதோ, அதுபோலப் பலவகையாலும் பிறருக்கு உபகரிக்கவேண்டுமென்ற குணத்தைப் பூமியின் அம்சமாகிய மரம், மலை இவைகளிடமிருந்து சாதுவாக இருப்பவன் தெரிந்துகொள்ளவேண்டும்.

39—41. பிராணன் சரீரத்தைவிட்டு வெளியிற் செல்லாமலிருப்பதற்கு ஆகாரமாத்திரம் அபேக்ஷிக்கிறதே யொழிய இந்திரிய விஷயங்களான ரூபம் முதலியவைகளை அபேக்ஷிக்கிறதில்லை. அதுபோல முனியாக இருப்பவன் தேகதாரணத்துக்கு வேண்டிய ஆகாரத்தைப் புசித்து அதனால் சந்தோஷப்படவேண்டுமேயல்லாமல் ரூபம், ரசம் முதலியவைகளை விரும்பக்கூடாது. (அழகான ஸ்திரீகளைப் பார்ப்பது, இனிமையான கானத்தைக் கேட்பது முதலியவை கூடாதென்றும், பிராணதாரணத்தைச் செய்யாவிடில் மனம் போய்விடுமாதலால் ஞானம் நசிக்குமென்றும் கருத்து.) அப்படி விஷயங்களில் ஆசைப்படுவானாகில் வாக்கு, மனம் இவைகள் விக்ஷேபத்தை அடையும். மேலும் வாயுவானது காட்டிலும், காட்டுத்தீயிலும் சம்பந்தப்படாமலிருப்பதுபோல் பலவகையான குணங்களுள்ள விஷயங்களில் பிரவேசித்தாலும் யோகியானவன் அதன் தர்மங்களில் சம்பந்திக்கக்கூடாது. பின்னும் வாயு வாசனை முதலியவைகளும் சம்பந்திப்பதுபோல் தோன்றினாலும் உண்மையில் எப்படி அந்தக் குணங்களுடன் சம்பந்தப்படுகிறதில்லையோ, அப்படி ஆத்மாவின் உண்மையை அறிந்த யோகியானவன் இந்தச் சரீரத்தில் ஆத்மா பிரவேசித்து பால்யம், யௌவனம் முதலிய அவஸ்தைகளை அடைந்தவன்போல் தோன்றினாலும் உண்மையில் ஆத்மாவிற்கு அதன் சம்பந்தமில்லையென்று தெரிந்துகொள்ளவேண்டியது.

*42—43.* ஆகாயமானது எங்கும் வியாபித்திருந்தாலும், ஒன்றிலும் சம்பந்தப்படாமலும் அளவிடக்கூடாமலும் எப்படி இருக்கிறதோ, அதுபோல ஆத்மா பிரம்ம சுரூபமாக எங்கும் வியாபித்திருப்பதால் தாவர ஜங்கம பிராணிகளில் மறைந்திருந்தாலும் ஒன்றிலும் சேராதவரென்றும், அளவிடக்கூடாதவரென்றும் தெரிந்துகொள்ள வேண்டும். மேலும் வாயுவினுல் தூண்டப்பட்ட மேகம் முதலியவைகளுடன் ஆகாயம் எப்படி சம்பந்தப்படுகிறதில்லையோ, அப்படி பூமி, ஜலம், தேஜஸ் இவைகளைக் கொண்டு காலத்தால் சிருஷ்டிக்கப்பட்ட சரீரத்துடன் ஆத்மா சம்பந்திக்கிறதில்லை.

*44.* இயற்கையில் பலமற்றவனும், ஜனங்களிடத்தில் பிரியமுள்ளவனும், இனிமையாகப் பேசுகிறவனும், மனிதர்களைச் சுத்தப்படுத்துகிறவனுமாகிய யோகி ஜலம் போல் பார்ப்பது, தொடுவது, சொல்வது ஆகிய இவைகளால் தோழனைச் சுத்தப்படுத்துகிறுன்.

*45—47.* மேலும் தேஜஸ் உள்ளவனுகவும் (அதிக ஞானத்தால்) மிக்க தபஸால் ஜ்வலிப்பவனுகவும், பிறரால் அவமதிக்கமுடியாதவனுகவும், வயிற்றைப் பாத்திரமாகக்கொண்டவனுகவும் இருக்கும் யோகி (சேர்த்து வைத்துக்கொள்ளாதவன்) எல்லாவற்றையும் (ருசியுள்ளது, ருசியற்றது) புசிப்பவனுலும் பாபத்தை அடைய மாட்டான். அக்னி எல்லாவற்றையும் எரித்தாலும் அதனுல் அக்கினிக்குத் தோஷமேற்படவில்லை அல்லவா? மேலும் முனியானவன் அக்கினிபோல் சில சமயம் வெளியில் தெரிந்தும் சஞ்சரிப்பான். க்ஷேமத்தை அடைய விரும்பியவர்கள் அவனை உபாசிப்பார்கள். அப்பொழுது அவர்களால் கொடுக்கப்படும் அன்னத்தைப் புசிக்கிறுன். அதனுல் அவர்களுடைய முன் செய்த பாபங்களும் (சஞ்சிதம்) வரும் பாபங்களும் (ஆகாமி) நிவர்த்தியடைகின்

றன. பின்னும் அக்கினி கட்டையில் பிடித்து ஜ்வலிக்கும்பொழுது கட்டை நீண்டதானால் அக்கினியும் நீண்டதாகக் காணப்படுகிறது. கட்டை கோணலாக இருந்தால் அக்கினியும் அந்த வடிவமுள்ளதாகக் காணப்படுகிறது. ஆனால் உண்மையில் அக்கினி ஒருவகையானதே. அதைப்போலப் பிரபுவாகிய ஈசுவரன் பிராம்மணன், சூத்திரன் முதலிய இந்த ஜகத்தைத் தம்முடைய மாயையால் படைத்து, அதில் பிரவேசித்துச் சேஷ்டிக்கிறார். (மேலானவன், தாழ்ந்தவனென்ற பேதம் ஆத்மாவிற்கு இயற்கையிலில்லை, ஆத்மா ஒருவகையுள்ளவனே. தேவ சரீர சம்பந்தம் நேர்ந்தபொழுது மேலானவனென்றும், பசு சரீர சம்பந்தம வந்த சமயத்தில் தாழ்ந்தவனென்றும் சொல்லப்படுகிறான். ஆனதால் மேன்மை, தாழ்வு என்பது சரீரமாகிய உபாதியால் ஏற்பட்டதேயொழிய இயற்கையானதல்ல.)

48—49. சந்திரனுடைய கலைகள் சிலகாலம் விருத்தி அடைகின்றன; சில காலம் குறைகின்றன. ஆனாலும் மண்டலத்திற்கு விருத்தியாவது குறைவாவது உண்மையில் எப்படி இல்லையோ, அப்படி ஜனனம் முதல் மரணம் வரையிலுள்ள விகாரங்கள் சரீரத்திற்கே யொழிய ஆத்மாவினுடையவை அல்ல. ஆத்மா ஜனிக்கிறதில்லை; விருத்தி அடைகிறதில்லை; வேறு நிலைமையை அடைகிறதில்லை; குறைகிறதில்லை; நாசமடைகிறதுமில்லை; மேலும் அக்கினியின் ஜ்வாலை எப்படி உண்டாகிறதும் அணைகிறதுமாக இருக்கிறதோ, அப்படி ஆத்மாவின் சம்பந்தமான சரீரங்களுக்கும் கால வேகத்தால் ஜனனம், மரணம் ஏற்படுகிறது. ஆனாலும் அதனை ஜனங்கள் லட்சியஞ் செய்யவில்லை. (தேகம் முதலியவைகள் ஸ்திரமில்லாதவையானதால் அவைகளில் ஆசை கொள்ளாமல் வைராக்கியத்தை அடையவேண்டுமென்று கருத்து.)

50—51. சூரியன் தம்முடைய கிரணங்களால் ஜலத்தைக் கிரகித்து அவைகளைச் சமயத்தில் (மழைக்காலத்தில்)வருஷிப்பதுபோல் யோகியானவன் இந்திரியங்களால் விஷயங்களைக் கிரகித்து யாசகர்களுக்குக் கொடுக்கிறான். ஆனாலும் 'இது என்னால் சம்பாதிக்கப்பட்டது' என்றாவது 'இதைப் பிறருக்குக் கொடுத்தேன்' என்றாவது அபிநிவேசத்தை அடைகிறதில்லை. மேலும், ஜலத்தில் பிரதிபிம்பித்த சூரிய மண்டலம் போல் ஆத்மா உபாதிகளில் பிரதிபலித்திருக்கிறார். அதனால் மந்தபுத்தியுள்ளவர்கள் ஆத்மா வெவ்வேறு என்று நினைக்கிறார்கள். (உண்மையில் பேதமற்றது).

52–72. (ஒருவரிடத்திலும், ஒருபோதும் அதிகப் பிரியமாவது, வார்த்தையாவது வைத்துக்கொள்ளக்கூடாது. அப்படி அல்லாமல் அதிகப் பிரியம் வைத்தால் மாடப்புறு போலத் தைனியமடைந்து தாபத்தை அடைவான்) ஒரு மாடப்புறு தன் மனைவியுடன் ஒரு காட்டில் மரத்தில் கூடு கட்டிக்கொண்டு வசித்தது. அவ்விரு புறுக்களும் ஒன்றின்மீது ஒன்று மிக்க பிரியம் வைத்திருந்தன. மேலும் அவைகள் கண்ணைக் கண்ணிலும், சரீரத்தைச் சரீரத்திலும், புத்தியைப் புத்தியுடனும் சேர்ந்து விசேஷ சிநேகம் உள்ளவைகளாக இருந்தன. பின்னும் அவைகள், படுப்பது, சஞ்சரிப்பது, உட்காருவது, வசிப்பது, விளையாடுவது, ஆகாரம் சாப்பிடுவது ஆகிய இவைகளை இரண்டுமாகச்சேர்ந்து செய்கிறதேயொழிய, விட்டுப் பிரிவதில்லை. இப்படி அவ்விரண்டு புறுக்களும் காடுகளில் பயமற்றுச் சேர்ந்து சஞ்சரித்து வந்தன. ஓ அரசனே ! அவைகளில் பெண் பறவை எதனை விரும்பியதோ, அதனுடைய கடைக்கண் பார்வை முதலியவையால் திருப்தி அடைந்து ஆண் பறவை அந்த அந்த இஷ்டத்தைச் சிரமப்பட்டாவது சம்மாதித்துக் கொடுத்து அதனை நிறை

வேற்றியது. சில நாளில் பெண் பறவை கர்ப்பமடைந்து பிரசவகாலத்தில் ஆண் பறவையின் முன்னிலையில் முட்டைகளை ஈன்றது. சில காலம் சென்றபின் அவைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்பட்டன. அவைகள் ஊகிக்க முடியாத பகவானுடைய சக்திகளான காலம், கர்மம், சுபாவம் ஆகிய இவைகளால் கை, கால் முதலிய அவயவங்களை அடைந்து அழகிய சரீரம், இறக்கை முதலியவைகள் உள்ளவையாக இருந்தன. மேலும், அவைகள் காதிற்கு இனிமையாகச் சப்தித்தன. அவைகள் மநோகரமாக விளையாடின. அவைகளுடைய இறக்கைகள் மிருதுவாக இருந்தன. இப்படிப்பட்ட அந்தப் பறவைக் குஞ்சுகளைப் பார்த்துத் தாய் தந்தைகளான பறவைகள் மிக்க பிரியத்துடன் அவைகளைப் போஷித்தன. அவைகளுடைய இனிமையான குரலைக் கேட்டும், விளையாட்டைப் பார்த்தும் சந்தோஷத்தை அடைந்தன. இப்படி அந்தப் பறவைகள் விஷ்ணுவின் மாயையால் மோகமடைந்து ஒருவருக்கொருவர் விசேஷ ஸ்நேகத்துடன் இளம் வயதிலுள்ள தங்கள் குழந்தைகளைக் காப்பாற்றிவந்தன. ஒரு நாள் தாய் தந்தைகளான பறவைகள் உணவு தேடி வருவதற்குக் காட்டிற்குச் சென்று தாமதித்தன. அந்தச் சமயத்தில் மரத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் பறவைக் குஞ்சுகளை ஒரு வேடன் பார்த்து வலையை விரித்துப் பிடித்தான். அப்பொழுது குஞ்சுகளைக் காப்பாற்றுவதிலேயே எப்பொழுதும் நோக்கமுள்ள அவ்விரண்டு பறவைகளும் உணவு சம்பாதித்துக்கொண்டு வந்து தம் குஞ்சுகள் வலையில் சிக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தன. அவைகளைக் கண்டவுடன் குஞ்சுகள் கதறின. அதனைக் கண்ணுற்ற பெண் பறவை தானும் கதறிக்கொண்டு அவைகள் சமீபம் சென்றது. மேலும் விஷ்ணுவின் மாயையால் அந்தக் குஞ்சுகளிடத்தில் விசேஷப் பிரியம் வைத்து

வலை வீசி இருப்பதை மறந்து தானும் வலையில் சிக்கிக் கொண்டது. பின்பு ஆண் பட்சி உயிரைக் காட்டிலும் அதிகமென்று நினைத்திருந்த குழந்தைகளும், தனக்குச் சமமாகிய மனைவியும் வலையில் கட்டுப்பட்டிருப்பதைப் பார்த்து மிகவும் துக்கித்தது. "ஓ ஜனங்களே! நான் சொற்ப புண்ணியம் செய்தவன்; புத்தியில்லாதவன்; எனக்கு நேர்ந்த கெடுதியைப் பார்த்தீர்களா? நான் இவ்வுலகத்துச் சுகத்தை அனுபவித்துப் போதுமென்ற திருப்தியை அடையவில்லை. பரலோக சுகத்தையும் சம்பாதித்துக்கொள்ளவில்லை. அப்படியிருக்க, தர்மம், அர்த்தம், காமம் இவைகளைக் கொடுக்கும் கிருகம் நாசமடைந்தது; என் மனைவி பர்த்தாவாகிய என்னையே தெய்வமாகக்கொண்டவள்; எனக்குச் சமமான குணமுள்ளவள்; அனுகூலமாக இருப்பவள்; அப்படிப்பட்ட மனைவி சூனியமாகிய வீட்டில் என்னை வைத்துச் சாதுக்களான குழந்தைகளுடன் சுவர்க்கத்திற்குப் போகிறாள். குழந்தைகளும் மனைவியும் மரணமடைந்த பிறகு நான் எதற்காக ஜீவிக்க வேண்டும்," என்று பிரலாபித்து வலையில் கட்டுப்பட்டு, மூர்ச்சையுற்றிருக்கும் பறவைகளைப் பார்த்துத் தானும் அந்த வலையில் விழுந்தது. அதனைக் கண்ணுற்ற வேடன் பெண் புரு, ஆண் புரு, குழந்தைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு மிக்க சந்தோஷத்துடன் தன்னுடைய வீட்டிற்குச் சென்றான்.

73—74. அதுபோல் கிருகஸ்தனாகிய புருஷன் சுக துக்கங்களில் ஆசைகொண்டு மனத்தின் சாந்தியையடையாமல் குடும்பத்தைப் போஷித்துக் கஷ்டப்படுவான். இந்த மனித சரீரம் மோட்சத்திற்கு மார்க்கமாக இருக்கிறது. அதை அடைந்தும எவன் மேற்காட்டிய பறவை போல் குடும்பத்தில் ஆசை வைக்கிறானோ, அவனை ஆரூடச்யுதன் (மேலான பதத்தை அடைந்தும் அதில் இருந்து விழுந்தவன்) என்று சொல்லுகிறார்கள். (புத்திரன் முதலியவர்களிடத்தில் ஆசைப்படுவது பறவைகளுக்கும் கெடுதியை விளைவிக்கிறது. ஆனதால் மனிதர்கள் அவைகளில் பற்றுதல் இல்லாமலிருக்கவேண்டும் என்று கருத்து).

---

## அத்தியாயம் 8

### மலைப் பாம்பு முதலியவைகளிடம் கற்றுக் கொண்டது

ஓ அரசனே ! பிராணிகளுக்கு இந்திரியங்களாலுண்டாகும் சுகம், துக்கம் இவைகள் சுவர்க்கத்திலும் நரகத்திலும் நேரிடுகின்றன. ஆனதால் வித்துவானாக இருப்பவன் இந்திரிய சுகத்தை விரும்பக்கூடாது. (பிராரப்தமாகிய கர்மத்தின் பயனை அனுபவிக்கவேண்டியது அவசியமாகையால் அதற்காக வீணில் முயன்று அதனால் ஆயுளைச் செலவிடக்கூடாது என்று தாத்பரியம்.) மேலும் மலைப்பாம்பு போல ரசமுள்ளதானாலும், ரசமற்றதானாலும், சொற்பமானாலும், அதிகமாயிருந்தாலும் தெய்வச் செயலால் கிடைத்த அன்னத்தைப் புசித்து அதற்காக முயற்சிக்காமல் உதாசீனனாக இருக்கவேண்டும். (எவ்வளவு ஆகாரம் புசித்தால் சரீரம் இருக்குமோ அவ்வளவு ஆகாரத்தை மாத்திரம் புசிக்கவேண்டும். அதற்காகவும் தான் முயற்சி செய்யவேண்டாமென்று கருத்து.) தெய்வச் செயலாக ஆகாரம் கிடைக்காவிடினும், தெய்வமே நமக்கு ஆகாரத்தைக் கொடுக்கும் என்ற நிச்சயத்துடன் ஆகாரமில்லாமல் வெகு நாளானாலும் அதற்காக யாதொரு முயற்சியும் செய்யாமல் படுத்திருக்கவேண்டும். மேலும் இந்திரிய பலம், மனோ பலம், சரீர பலம் இவைகள் உள்ளவனானாலும் யாதொரு முயற்சியும் செய்யாமல் படுத்திருக்கவேண்டும். ஆனால் தூங்கக்கூடாது. (ஆத்மாவிடத்தில் மனமுள்ளவனாக இருக்கவேண்டுமென்று கருத்து.) கண் காது முதலிய இந்திரியங்களுள்ளவனானாலும் ஒன்றையும் பார்க்கக்கூடாது; கேட்கவுங்கூடாது. (இம்மாதிரி மலைப் பாம்பினிடமிருந்து கற்றுக்கொண்டேன் என்று கருத்து.)

5—6. தெளிந்ததும், ஆழமுள்ளதும், பிரவகிக்க முடியாததும், தாண்ட முடியாததும், கரையற்றதும், கலக்க முடியாததும், அலைகளில்லாமல் அசைவற்றிருப்பதுமான சமுத்திரம் போல யோகியானவன் வெளியில் தெளிந்தும் காம்பீரியமுள்ளவனாகவும், இம்மாதிரியான அபிப்பிராயமுள்ளவனென்று அறிய முடியாதவனாகவும், பிறரால் தாண்ட முடியாதவனும், அளவிடக்கூடாதவனாகவும் (சுரூபத்தை அறிந்ததனால்), விகாரத்தை அடையாதவனாகவும் (ஆசை முதலியவைகள் இல்லாததனால்) இருக்கவேண்டும். மேலும், மழைக்காலத்தில் அனேக ஆறுகள் சமுத்திரத்தில் விழுந்தாலும் சமுத்திரம் எப்படி விருத்தியடைகிறதில்லையோ, கோடைக்காலத்தில் அந்த நதிகளின் ஜலம் சமுத்திரத்தில் சேராமலிருந்தாலும் சமுத்திரத்தில் எப்படி குறைகிறதில்லையோ, அப்படி யோகியானவன் ஸ்ரீமந் நாராயணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தி, விஷய போகங்கள் அதிகமாகக் கிடைத்தாலும் அதனால் சந்தோஷிக்கக்கூடாது; விஷய போகங்கள் கிடைக்காவிடினும் அதனால் துக்கப்படக்கூடாது என்பதைச் சமுத்திரத்தினிடம் கற்றுக்கொண்டேன்.

7—8. விளக்கு விட்டிற்பூச்சியானது தீபஜ்வாலையைப் பழமென்று நினைத்து அதில் விழுந்து மரணமடைவது போல் முனியானாலும் தேவமாயையாகிய ஸ்திரீயைப் பார்த்து அவளுடைய அழகான பார்வை முதலியவைகளால் ஏமாற்றப்பட்டு இந்திரியங்களை அடக்க முடியாமல் விஷயங்களில் மூழ்கிச் சம்ஸாரியாக ஆகிறான். மேலும், ஸ்திரீ, தங்கம், ஆபரணம், வஸ்திரம் முதலிய திரவியங்கள் மாயையால் செய்யப்பட்டவைகளேயொழிய உண்மையானவை அல்ல. அப்படிப்பட்ட திரவியங்களைத் தான் அனுபவிக்கலாமென்று நினைத்து மூடனாகிய மனிதன் விவேகமற்று விளக்கு விட்டிற்பூச்சிபோல நாசத்தை

அடைகிறான். (ரூபம், ரசம், காந்தம், ஸ்பரிசம், சப்தம் என்று விஷயங்கள் ஐந்து.) ஆவைகளில் ஆசைப்படக் கூடாது. ரூபத்தில் ஆசைப்பட்டு விளக்கு விட்டிற்பூச்சி மரணமடைகிறது. வண்டுகள் வாசனையில் ஆசைப்பட்டும், யானைகள் தொடுவதில் ஆசைகொண்டும், மான்கள் சப்தத்தில் ஆசைகொண்டும், மீன்கள் ரசத்தில் ஆசைப் பட்டும் நசிக்கின்றன.)

9—12. பின்னும் வண்டானது எப்படி ஒவ்வொரு புஷ்பத்திலுமிருந்து அவைகளை உபத்திரவியாமல் சொற் பம் சொற்பமாகத் தேனை எடுத்துக்கொள்ளுகிறதோ, அப்படி முனியாக இருப்பவன் கிருகஸ்தர்களை உபத்திர வியாமல் சரீர ஸ்திதிக்கு வேண்டிய ஆகாரத்தை (எவ் வளவு ஆகாரம் புசித்தால் சரீரம் ஜீவிக்குமோ அவ்வளவு) பெற்றுக்கொள்ளலாம். அதனையும் கொஞ்சம் கொஞ்ச மாகக் கிரகிக்கவேண்டும். இப்படிச் செய்யாமல் ஒரே கிருகஸ்தனுடைய வீட்டிலேயே இருப்பானாகில் அந்தக் கிருகஸ்தனுடைய சுக துக்கங்களில் இவனுடைய மனம் கலங்கும். அதனால் சம்ஸாரத்தை அடைவான். வண் டானது ஒரே தாமரை மலரில் அதன் வாசனையில் ஆசை கொண்டு வசிக்குமானால் அஸ்தமய காலத்தில் அந்த மலர் மூடிக்கொள்ளும்பொழுது அது கட்டுப்படுகிறதல் லவா? பின்னும் தேனீயானது பருத்த புஷ்பங்களி லிருந்தும், சிறிய புஷ்பங்களிலிருந்தும் சாரமாகிய தேனை எப்படி எடுத்துக்கொள்ளுகிறதோ அப்படி விவேகியான புருஷன், அணுவானாலும் பருத்ததானாலும் சாஸ்திரங் களில் எது சாரமோ அதனைக் கிரகித்துக்கொள்ளவேண் டும். முனியானவன் பிட்சை எடுத்த அன்னத்தை 'இது சாயங்காலம் புசிப்பதற்கு இருக்கட்டும், இது நாளைக்காக இருக்கட்டும்' என்று சேர்த்துவைத்துக்கொள்ளக் கூடாது. கையையும் வயிற்றையும் பாத்திரமாக வைத்துக்

கொள்ளவேண்டும். (கையில் வாங்கி வாயில் போட்டுக் கொள்ளவேண்டுமே யல்லாமல் சேர்த்துவைக்கக் கூடாது என்று கருத்து.) இப்படிச் செய்யாமல் 'சாயங் காலம் புசிப்போம், நாளைக்குப் புசிப்போம்' என்று சேர்த்துவைப்பவன் கெட்டுப்போவான். தேனீக்கள் தேனைச் சேர்த்துவைத்து அதனைத் தாங்கள் புசிக்காம லேயே பிறரால் கொல்லப்படுகின்றனவல்லவா? (தேனீக் களிடம் மேற்காட்டியதைத் தெரிந்துகொண்டேன்.)

*13—14.* முனியாக இருப்பவன் மரத்தால் செய்யப் பட்ட ஸ்திரீ பிரதிமையையும் காலால்கூடத் தொடக் கூடாது. [எவ்வகையிலும் ஸ்திரீ சம்பந்தம் கூடாதென்று கருத்து.] அப்படித் தொடுவானாகில் பெண் யானையின் சரீரத்தைத் தொடுவதால் ஆண் யானை கட்டுப்படுவது போல் கெடுதியடைவான். (யானையைப் பிடிப்பவர்கள் காட்டில் பள்ளம் வெட்டி அதனைப் புற்பூண்டுகளால் மறைத்து பெண் யானையைக் காட்டிக் காட்டிலுள்ள ஆண் யானையை அதன் வழியாக நடத்திப் பள்ளத்தில் தளளுகிறார்கள். பின்பு அவர்களுக்கு அது வசப்படு கிறது.) விவேகியாக இருப்பவன் ஸ்திரீயைத் தனக்கு மிருத்யுவென்று நினைத்து ஒருபொழுதும் அவள் வழி செல்லாமலும், அவளிடத்தில் ஆசைப்படாமலும் இருப் பான். அப்படியிராமல் ஆசைப்படுவானாகில் இவனைக் காட்டிலும் பலசாலிகளான மனிதர்கள் இவனைக்கொன்று விடுவார்கள். ஒரு பெண் யானையின் மீது ஆசைகொண்ட ஆண யானையை அதனைவிடப் பலசாலிகளான மற்ற யானைகள் கொல்லவில்லையா?

*15—16.* தேனீக்கள் தாம் புசியாமலும், பிறருக்குக் கொடாமலும் தேனை ரகசியமான இடத்தில் சேர்த்துவைக் கின்றன. அதனை மனிதன் தெரிந்துகொண்டு எப்படி எடுத்துக்கொண்டுபோகிறானோ, அப்படி மனி

தர்கள் தாங்கள் அநுபவிக்காமலும், பிறருக்குக் கொடாமலும் சிரமப்பட்டுப் பணத்தைச் சேர்த்து வைக்கிறார்கள்; அதனை மற்றவன் அபகரித்துக்கொள்ளுகிறான். அவனைக் காட்டிலும் பலசாலியாக இருப்பவன் அவனிடமிருந்து அந்தப் பணத்தை அபகரித்துக்கொள்ளுகிறான். (ஆனதால் பிறருக்குக் கொடாமலும், தான் அநுபவியாமலும் தனத்தைச் சேர்த்து வைத்தால் அதனைப் பிறர் கொண்டுபோவார்கள் என்பதைத் தேன்பூச்சியினிடமிருந்து தெரிந்துகொண்டேன்.) மேலும், தேனீக்கள் சிரமப்பட்டுச் சம்பாதித்து வைத்த தேனை மற்றவன் எப்படி எளிதில் அடைகிறானோ, அதுபோல் சிரமப்பட்டுச் சம்பாதித்த திரவியங்களைக்கொண்டு கிருக கிருத்தியங்களை நடத்தும் கிருகஸ்தர்களுடைய அன்னத்தை முந்தி புசிப்பதற்கு சந்நியாசி பாத்தியமுள்ளவனாக இருக்கிறான். (சந்நியாசியும் பிரம்மசாரியும் சமைத்த அன்னத்தில் பாகமுள்ளவர்கள். அவர்களுக்குக் கொடாமல் தான் மாத்திரம் புசிக்கும் கிருகஸ்தன் சாந்திராயணம் என்ற விரதத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்று ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதால் தன்னுடைய முயற்சியில்லாமலேயே போகங்கள் கிடைக்கின்றன. அதற்காகச் சிரமப்படவேண்டாம்.)

17-18. வனத்தில் வேடனுடைய பாட்டைக் கேட்டு மோகித்து அசைவற்று நின்ற மானனது வேடனால் அடிக்கப்படுகிறதல்லவா? அதுபோலக் காட்டில் சஞ்சரிக்கும் யதியானவன் கிராம்யமான கானத்தைக் கேட்கலாகாது. (பகவத் விஷயமான கானத்தைத் தவிர மற்றவை) கேட்டால் விஷயங்களில் பிரவிருத்தி யுண்டாகும். மேலும், மான் வயிற்றில் பிறந்தவரான ரிஷ்யசிருங்கரென்பவர் ஸ்திரீகளால் செய்யப்பட்ட நர்த்தனம், கானம், வாத்தியம் இவைகளைப் பார்த்தும், கேட்டும் அவர்களுக்கு விளையாட்டு மிருகம்போல் வசப்பட்டிருந்தார்.

19—21. ஜனங்களுக்கு நாக்கு (ஜிஹ்வேந்திரியம்) மிக்க கெடுதியை விளைவிக்கின்றது. அதனை ஜயிப்பது மிகவும் கஷ்டம். மீனானது தூண்டில் முள்ளில் இருக்கும் மாமிசத்தில் ஆசைப்பட்டு மரணமடைவதுபோல் நாக்கை ஜயிக்காதவன் ரசத்தில் ஆசைகொண்டு மிக்க கெடுதியை அடைவான். விவேகிகள் இந்திரியங்களை ஜயிப்பதற்காக ஆகாரத்தைத் தள்ளிவிடுகிறார்கள். அதனால் எல்லா இந்திரியங்களையும் ஜயிக்கிறார்கள். ஆனால் நாக்கை மாத்திரம் ஜயிக்க முடியவில்லை. ஆகாரம் புசிக்காதவனுக்கு நாக்கின் வியாபாரமானது விருத்தியாகிறதேயொழியக் குறைவதில்லை. நாக்கை ஜயிக்காமல் மற்றவைகளை ஜயித்தவன் இந்திரியங்களை ஜயித்தவனென்று சொல்லப்படமாட்டான். ஆனதால் நாக்கை ஜயித்தால் மற்றவை யாவும் ஜயிக்கப்பட்டதாகும்.

22—23. ஓ ராஜகுமாரராகிய யதுவே! விதேக என்ற பட்டணத்தில் பிங்களா என்ற தேவரடியாள் (தாசி) ஒருத்தி இருந்தாள். அவளிடமாக நான் சொற்பம் தெரிந்துகொண்டேன். அதனைச் சொல்லுகிறேன், கேளும். அந்த வியபிசாரியான பிங்களா என்பவள் தன்னுடைய சரீரத்தை நன்றாய் அலங்கரித்துக்கொண்டு ஒரு நாள் இரவில் தன்னுடைய வீட்டின் வாசற்படியில் நின்று புருஷர்களை உள்ளே அழைத்துப்போவதில் நோக்கம் உள்ளவளாகக் காத்துக்கொண்டிருந்தாள். பணத்தில் ஆசையுள்ள அந்தத் தாசி தெருவில் போகிற ஜனங்களில் பணக்காரர்களும், தனக்குப் பணம் கொடுப்பவர்களுமான மனிதர்களைத் தனக்குப் புருஷனென்று நினைத்து அவர்களுடன் ரமித்தாள். அவர்கள் தன் வீட்டை விட்டுச் சென்றபின், "இவனைப்போல் மிக்க பணம் கொடுக்கும் பணக்காரன் வேறு யாராவது வருவானோ" என்று துராசைகொண்டு வாயிற்படியில் நிற்ப